# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 102 | வள்ளுவர் ஆண்டு: 2046 | மாசி 24, ஞாயிற்றுக்கிழமை 08.03.2015


வானிலை
மேக
மூட்டமான
வானிலை
காணப்படும்
இரவு
வேளையில்
குளிரான
கால நிலை
காணப்படும்.

## இலங்கை–இந்திய கப்பல் சேவை குறித்து பேச்சு

கொழும்பு, மார்ச் 8
இலங்கை– இந்தியாவுக்கிடையிலான கப்பல் சேவையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருக்கிடையில் கலந்துரையாடப் பட்டதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஏ.எம்.ஜே சித்திக் தெரிவித்துள்ளார்.
இரு வெளிவிவகார அமைச்சர்களுக்குமிடையே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு

பக்கம் 25


5 மீன்பிடித் துறைமுகங்கள் வடக்கில் அமைக்க உதவுக
பக்கம் 2

நிதி நிறுவனங்கள் ஆதிக்கம் வடக்கு மக்களுக்குப் பாதிப்பு
பக்கம் 3

100 இல் சரிபாதி ஒடிக்கழிந்து விட்டதே வெற்றிக் கனியைப் பறிக்க முடியுமா?
பக்கம் 8


# ஐக்கியமாக இருங்கள்

## கூட்டமைப்புக்கு இந்தியா 'அட்வைஸ்'



யாழ்ப்பாணம், மார்ச் 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கியமாக– ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ள இந்திய மத்திய அரசு, அவ்வாறு செயற்ப டுவதன் ஊடாகவே இனப் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வை எட்ட முடியும் என்றும் ஆலோசனை வழங்கியுள்ளது.
'ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். நீங்கள் ஒற்றுமையாக இருப்பதாக வெளியில் இருந்து பார்ப்பவர்கள் உணரவேண்டும்' என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களிடம், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் வலியுறுத்தியுள்ளார்.
இலங்கைக்கு இரு நாள் பயணமாக வந்துள்ள, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்று மாலை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தவர்கள் தமிழ் மக்கள் என்று குறிப் பிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா, ஏற்பட்டுள்ளது அரைவாசி மாற்றமே, இன் னமும் முழுமையான மாற்றம் ஏற்படவேண் டும் என்று தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலின்போது அரசியல் கட்சிகள் எவ்வாறு ஒற்றுமையா்கச் செயற்பட்டு மாற்றத்தை ஏற்படுத்தினார்களோ அதே போன்று நாடாளுமன்றத் தேர்தலின்போதும்

பக்.25

# அத்துமீறும் மீனவரை சுடுவதில் தவறில்லை

## கூறுகிறார் பிரதமர் ரணில்



கொழும்பு, மார்ச் 8
கச்சதீவு இலங்கைக்கே சொந்தம். எங்கள் மீனவர்கள் வாழ்வுரிமையைப் பறிக்கும் வகையில் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் தமிழக மீனவர்கள் சுடப்பட்டால் எங்கள் சட்டம் ஏற்றுக்கொள்ளும்' எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
இந்தியாவின் 'தந்தி' தொலைக்

பக்.25

# 19 ஆவது திருத்தம் 24 இல் சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 8
மஹிந்த ஆட்சியில் கடுமையாக எதிர்க்கப்பட்ட 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவு எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக் கப்படவுள்ளது.
நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய "அதிகாரத்தை மட்டுப்படுத்தல், தேர்தல் முறைமையில் திருத்தம், அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல், 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாது ஒழித்தல் ஆகிய விடயங்கள் 19 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
முன்னதாக, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையில் மாற்றம், சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்தல் ஆகிய இரண்டு விடயங்களை மையப் படுத்தியே 19 ஆவது திருத்தச் சட்டவரைவு சபையில் சமர்ப் பிக்கப்படவிருந்தது.
எனினும், பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொடர் அழுத்தங்கள் காரணமாக, தேர்தல் முறைமையில் மாற்றம் என்ற விடயமும்அதில் உள்ளடக் கப்பட்டுள்ளது. (த–சி)

## கிணற்றில் விழுந்து சிறுவன் சாவு

கிளிநொச்சி, மார்ச் 8
விசுவமடு வள்ளுவர்புரம் பகுதியில் நான்கரை வயதுச்சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தான்.
நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் விஜேந்திரன் அபிஷேக் என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தான்.
தாயாருடன் வீட்டில் நின்ற சிறுவன் ஒரே காணியில் உள்ள தனது பேர்த்தியாரின் வீட்டுக்குச் சென்றுள்ளதாகவும், அங்கு பேர்த்தியார் வெளியே சென்றதால் யாரும் இல்லாத வேளை கிணற்றை எட்டிப் பார்த்தபோதே தவறி விழுந்ததாகவும் கூறப்பட்டது.

பக்கம் 25

# லண்டனில் தமிழர் மத்தியில் உரையாற்றுகிறார் மைத்திரி

## முதலீட்டாளர்களைச் சந்திக்கவும் ஏற்பாடு



கொழும்பு, மார்ச் 8
உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு பிரிட்டன் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளை ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.
எதிர்வரும் 10 ஆம் திகதி அவரின் உரை இடம்பெறும் எனப் பயண நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
போர் காரணமாகவும், கடந்த அரசின் அராஜகச் செயற்பாடுகளாலும் நாட்டைவிட்டு வெளியேறியவர்களை மீண்டும் இலங்கை வருமாறு இதன் போது அவர் அழைப்பு விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.
அதேவேளை, பிரிட்டன் முதலீட்டாளர் களுட

பக்.25

# முறிகண்டியில் 2 விபத்துகள் ஒருவர் சாவு; 10 பேர் காயம்



கிளிநொச்சி, மார்ச் 8
கிளிநொச்சி முறிகண்டிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இருவேறு வாகன விபத்துகளில் ஒருவர் உயிரிழந்தார். பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து தம்புள்ளைக்கு மரக்கறி ஏற்றிச் சென்ற லொறி முறிகண்டிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.
இந்த விபத்தில் லொறியில் பயணித்த ஒருவர் உயிரிழந்ததுடன், சாரதி உட்பட ஐவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேக்கப்பட்டுள் ளனர்.
மரக்கறி ஏற்றி வந்த லொறியின் சில்லு காற்று போனதாலேயே அது வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாகக் கூறப்பட்டது.

பக்.25





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 மீன்பிடித் துறைமுகங்கள் வடக்கில் அமைக்க உதவுக

## இந்தியத் துணைத் தூதுவரிடம் கோரிக்கை

வலி.தென்மேற்கு, மார்ச் 8

கடற்றொழிலாளர்களின் வசதி கருதி மீன்பிடி வள்ளங்களைப் பாதுகாப்பாகக் கட்டி விடுவதற்கு ஏற்றதாக வடக்கு மாகாணத்தில் ஐந்து மீன்பிடித் துறைமுகங்களை அமைத்துத் தருமாறு தேசிய மீனவர் மகா சம்மேளத்தின் உப தலைவரும் யாழ்.மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவருமாகிய என்.பொன்னம்பலம் யாழ். இந்திய துணைத் தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடபகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கவேண்டிய அவசியம் குறித்து சம்மேளனத் தலைவர் இந்தியத் துணைத் தூதுவரிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்திய அரசு பலவிதமான உதவிகளைச் செய்து வருகிறது. வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களிலும் வசிக்கும் மீனவர்கள் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்தி வரும் பல இலட்சம் ரூபா பெறுமதியான வள்ளங்களைப் கட்டிவிடுவதற்குப் பாதுகாப்பான பொருத்தமான இடம் இல்லாத மையால் கடற்கரை ஓரங் களில் அவற்றைக் கட்டுகிறார்கள். திடீரென ஏற்படும் இயற்கை மாற் றங்களினால் பரந்த வெளியில் கட்டி நிற்கும் வள்ளங்கள் ஒன்றோடொன்று மோதுண்டு சேதத்துக்குள்ளாவதால் பொருளாதார ரீதியில் மீனவர்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள.

இதைத் தவிர்க்கும் வகையில் வள்ளங்களைப் பாதுகாப்பாகக் கட்டி விடுவதற்கு வசதியாக யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஐந்து துறைமுகங்களை அமைத்துத் தருமாறும் இந்தத் துறைமுகங்களில் சகல மீனவர்களும் வள்ளங்களைக் கட்டி விடுவதற்குரிய வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கூறியுள்ளார்.

(த-115)

## வன்முறையிலிருந்து பெண்களைக் காப்போம்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

நல்லாட்சி அரசின் கொள்கைக் கமையப் பெண்களுக்கெதிரான சமூக மற்றும் உள்நாட்டு வன்முறைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப் போவதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள், மதுபானம், வன்முறைக்ள் போன்றவற்றில் இருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கு அரசு கடமைப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

பெண்களுக்கான சிறந்த நாடு என்ற தலைப்பில் இன்று இடம் பெறவுள்ள மகளிர் தினத்துக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## அனுமதியின்றி 6 பசு மாடுகள் ஏற்றிச் சென்ற இருவர் கைது

பிரதேச செயலரினதும் கால்நடை வைத்திய அதிகாரியினதும் அனுமதிப் பத்திரமின்றி சிறிய ரக பட்டா வாகனத்தில் 6 பசுக்களை ஏற்றிச் சென்ற இரண்டு பேர் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குறித்த பசு மாடுகளை மிருகவதை ஏற்படுத்தும் வகையில் கொண்டு சென்றபோது கிடைத்த தகவலின் பேரில் குறித்த வாகனத்தை நிறுத்திப் பரிசோதித்த போதே அனுமதிப் பத்திரம் இல்லாதமை தெரியவந்ததாகப் பொலிஸார் கூறினர்.

இவர்களைப் பொலிஸார் மன்றில் முற்படுத்தியவேளை சந்தேக நபர்களைத் தலா ஒரு லட்சம் ஆள்பிணையிலும், மாடுகளை மூன்று லட்சம் ரூபா பிணையிலும் விடுவிக்குமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

(த-103)

## ஜெயக்குமாரி இன்றி நடந்த விபூசிகாவின் நீராட்டுவிழா



கிளிநொச்சி, மார்ச் 8

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட விபூசிகாவின் தாய்க்குப் பிணை வழங்காத நிலையில் விபூசிகாவின் பூப்புனித நீராட்டு விழா தாயார் இன்றிய நிலையில் நடந்தது.

தனது பூப்புனித நீராட்டு விழாவுக்காக தாயார் பாலேந்திரன் ஜெயக்குமாரியை பிணையில் விடுவிக்குமாறு விபூசிகா ஜனாதிபதி மைத்திரிக்குக் கடிதம் எழுதியிருந்தாள்.

கிளிநொச்சியில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் சி.ஐ.டியினரால் சேர்க்கப்பட்ட விபூசிகாவின் பூப்புனித நீராட்டு விழா நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

அவளது தாயார் ஜெயக்குமாரி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.அவரை விடுவிக்குமாறு கோரிப் போராட்டங்களும் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## ரணிலிடம் கேள்வி எழுப்புவார் சுஷ்மா

கொழும்பு, மார்ச் 8

எல்லை தண்டும் மீனவர்களை சுடுவோம் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தமிழகத் தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார். இது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கேள்வி எழுப்புவார் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தமிழகத் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எல்லை தாண்டி வரும் மீனவர்களைச் சுடுவதில் தவறில்லை எனத் தெரிவித்தார். எல்லை தாண்டி வரும் மீனவர்களை சுடுவதில் எந்த மனித உரிமை மீறலும் இல்லை. இதற்குச் சட்டத்தில் முறையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என ரணில் தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கைக்கு பயணம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இலங்கைப் பிரதமரைச் சந்தித்து இந்த விவகாரம் குறித்துப் பேசுவார் என்று இந்திய வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறைச் செய்தி தொடர்பாளர் சையது அக்பரூதின் கூறுகையில், மீனவர்கள் பிரச்சினை மனிதாபிமானம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினை. இந்த விவகாரத்தில் இலங்கையுடன் இணைந்தே தீர்வு காண விரும்புகிறோம்.

அமைதியாகவும் நட்பு ரீதியாகவும் இந்த விவகாரம் தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். இலங்கை பிரதமர் ரணில் விக்ர மசிங்கவைச் சந்திக்கும் போது சுஷ்மா சுவராஜ் மீனவர்கள் விவகாரம் குறித்துப் பேசுவார் என்று தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைப் பிரதமரின் இந்தக் கருத்துப் பற்றி இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடனான சந்திப்பின்போது சுஷ்மாசுவராஜ்கேள்வி எழுப்புவார் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## நகர அபிவிருத்தி, நீர் வழுங்கல் சபைகள் ஒரே கட்டமைப்புக்குள்

கொழும்பு, மார்ச், 8

நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை காணி மீட்டல் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் செயற்பாடுகளை ஒரே கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கை காணி மீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்ட அமைச்சர் அங்கு உயரதிகாரிகளுடன் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

'சதுப்பு நிலங்களைப் பண்படுத்தி, மீள்நிரப்பி மக்கள் பாவனைக்குப் பயன்படுத்துதல். நீர் நிலைகளையும், கால்வாய்களையும் மீளமைத்தல், கட்டடங்களுக்கான வரைபடங்களைத் தயாரித்து, நிர்மாணித்தல், ஆழ்கடலில் இருந்து பெறப்படும் மணலை கட்டட நிர்மாணத்திற்குப் பயன்படுத்துவதற்காகச் சேகரித்து விநியோகித்தல், பொழுபோக்கிற்கும், உடற்பயிற்சிக்குமான நடைபாதைகளை அமைத்தல், பறவை சரணாலயங் களைப் பராமரித்தல், நகரங்களை அழகுபடுத்துதல் போன்றன இந்த கூட்டுத்தாபனத்தின் கீழ் வருகின் றன.



கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் மட்டுமல்லாது நாட்டின் ஏனைய சில பகுதிகளிலும் இக்கூட்டுத்தாபனம் தனது செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது. கனரக இயந்திரங்களின் உதவியோடு அனுபவம் வாய்ந்த பொறியியலா ளர்களினதும், கட்டடக் கலை நிபுணர் களினதும் வழிகாட்டுத லின் கீழ் அர்ப்பணிப்பு மிக்க ஊழி யர்களின் ஒத்துழைப்புடன் இக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கு-கிழக்கு மாகா ணங்க ளுக்கும் இதன் பணிகள் விஸ்தரிக் கப்படவுள்ளது' எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.எச்.எம். சல்மான், பொது முகாமையாளர் சிறிமதி சேனாதீர, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள், அமைச்சின் கீழுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர். (த-10)

## சிகிரியா சுவரில் எழுதிய மகளை விடுவியுங்கள்

### தாயார் உருக்கம்

கொழும்பு, மார்ச் 8

சிகிரியாவில் உள்ள கண்ணாடிச் சுவரில் பெயர் எழுதிய உதயசிறி இரண்டு வருடச் சிறைவாசம் அனுபவித்து வரும் நிலையில், அவரது தாயாரால் தனது மகளை மீட்டுத் தருமாறு கோரி உருக்கமான வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் தனது நண்பிகளுடன் சுற்றுலா சென்ற மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த உதயசிறி தனது பெயரை உதயா என சிகிரியாவில் உள்ள கண்ணாடிச் சுவர் ஒன்றில் எழுதியிருந்தார். இதன்போது அங்குள்ள அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டு, கடந்த 2ஆம் திகதி தம்புள்ளை நீதிமன்றம் இரண்டு வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இது தொடர்பில் இவரது தாயார் உருக்கமான வேண்டுகோளை முன் வைத்துள்ளார்.

தனது மகள் தெரியாமல் அங்கு தனது பெயரை எழுதியுள்ளதாகவும்,அங்கு அவ்வாறு எழுதக் கூடாது என அவளுக்குத் தெரியாது. இதேபோன்று வேறு சிலரும் பெயர் எழுதியுள்ளதாக நான் அறிவேன்.ஆனால் அவர்களுக்குத் தண்டப் பணம் மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது.

சில ஊடகங்கள் தனது மகள் காதலனின் பெயரை எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளனர்.ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை.தனது மகளின் வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் யாரும் நடந்து கொள்ளவேண்டாம்.

எனது மகளுக்கு மன்னிப்பு வழங்க அரசு முன்வரவேண்டும். அரசியல்வாதிகளும் அதிகாரத்தில் உள்ளவர்களும் இவ்விடயம் தொடர்பில் தலையிட்டு எனது மகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கவேண்டும். நான் ஒரு நோயாளி என்பதுடன் அப்பம் விற்றுத்தான் வாழ்க்கையை நடத்தி வருகிறேன்.எனது மகள் வீடு திரும்பவில்லை என்றால் நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை. எப்படியாவது எனது மகளை மீட்டுத்தாருங்கள். இவ்வாறு மிகவும் உருக்கமான வேண்டுகோளை முன்வைத்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்கான் கிளினிக் நாளை

தென்மராட்சி, மார்ச் 8
சாவகச்சேரி மருத்துவமனையில் நாளை திங்கள்கிழமை காலை 8 மணிக்கு ஸ்கான் கிளினிக் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## கர்ப்பிணிகளுக்கு இலவச ஓட்டோ

சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு வரும் கர்ப்பிணித் தாய்மாரைச் சாவகச்சேரி மருத்துவமனைக்கு இலவசமாக ஏற்றிச் செல்ல சாவகச்சேரி ஓட்டோச் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் இடம்பெற்ற ஓட்டோ உரிமையாளர்களுடனான சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஓட்டோ உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தூர இடங்களிலிருந்து பிரசவத்துக்காகச் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு வரும் கர்ப்பிணித் தாய்மார் பஸ் நிலையத்தில் தரித்து நிற்கும் ஒட்டோவில் மருத்துவமனைக்குச் செல்வது வழக்கமாகும்.

நாளை திங்கள்கிழமை தொடக்கம் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்குத் தூர இடங்களிலிருந்து வரும் கர்ப்பிணித் தாய்மாரை இலவசமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## இறைச்சிக்குக் கொண்டு வந்த மாடுகளை தடுத்த படையினர்

மன்னார்,மார்ச் 8
மன்னார் உயிலங்குளத்திலிருந்து மன்னார் தீவுப் பகுதிக்கு இறைச்சிக்காக கொண்டு வரப்பட்ட மாடுகளை விசேட அதிரடிப் படையினர் உயிலங்குளத்துக்கு திருப்பி அனுப்பிய சம்பவமொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மன்னார் நகரப் பகுதியிலுள்ள மாட்டு இறைச்சி விற்பனை நிலையம் ஒன்றுக்கு, மன்னார் உயிலங்குளம் கிராமத்திலிருந்து சிலர் 7 மாடுகளைக் கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது வங்காலை பிரதான வீதியில் நின்ற விசேட அதிரடிப் படையினர், மாடுகளைக் கொண்டு வந்தவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் மன்னாரில் இனி மாடு வெட்ட அனுமதிக்கமாட்டோம் எனத் தெரிவித்து அவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த மாட்டு இறைச்சி விற்பனை நிலைய உரிமையாளருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, இறைச்சி விற்பனை நிலையத்தின் உரிமையாளர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த உரிமையாளர், மன்னார் நகர சபையின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் அனுமதி பெற்றே மாட்டு இறைச்சி விற்பனை நிலையத்தை நடத்தி வருவதாகவும், இந்த வருடம் டிசெம்பர் மாதம் வரை தனது அனுமதி உள்ளதாகவும் மன்னார் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரின் உத்தரவுக்கமைய மாடுகளை மீண்டும் உயிலங்குளத்திலிருந்து மன்னாருக்குக் கொண்டு வந்துள்ளனர். (த-56)

# நிதி நிறுவனங்கள் ஆதிக்கம் வடக்கு மக்களுக்குப் பாதிப்பு

### கூறுகிறார் சிரேஸ்ட விரிவுரையாளர் இரட்ணம்

யாழ்ப்பாணம், மார்ச் 8
வடபகுதியில் பொருளாதார ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் நிதி நிறுவனங்களின் ஆதிக்கத்தால் அதிகளவான மக்கள் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் கடன் சுமைகளில் இருந்து மீள முடியாமல் தலைமறைவாகி இருக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் இணைந்து நடத்திய யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் பிரிவுபசாரமும், வரவேற்பு நிகழ்வும் நேற்று வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கும்போது,

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் ஒருவருக்கு இரண்டு கைத்தொலைப்பேசிகள் எனப் பாவனைகள் அதிகரித்துள்ளன. இதன் அடிப்படையில் ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்களின் தொலைபேசிக் கட்டணச் செலவு ஒரு நாளின் உணவுத் தேவையை நிறைவேற்றக் கூடியதாகவுள்ளது. ஆனால் மக்களின் செலவுகள் அதிகரித்து வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட பெரிய பிரச்சினையாக நிதி நிறுவனங்கள், வங்கிகள் பல்வேறு நலத்திட்டங்களை வழங்குவதாகக் கூறி மக்களைத் தேடிச் சென்று கடன்களைக் கொடுத்து அவர்களைக் கடன்காரர்களாக மாற்றியுள்ளன. கடந்த காலங்களில் நிதி நிறுவனங்களையோ, வங்கிகளையோ மக்கள் தான் தேடிச் சென்று கடன்களைப் பெறக் கூடியதாக இருக்கும். ஆனால் இன்று அவ்வாறனதொரு நிலை இல்லை. பல்வேறு திட்டங்களிலும் சலுகைகளைத் தருவதாகக் கூறி சொத்துக்களை பறிக்கும் நிலைக்கு மக்களைத் தள்ளியுள்ளனர். கடன்களைப் பெற்றவர்கள் அவற்றைத் திருப்பிச் செலுத்த முடியாது தலைமறைவாக வாழவேண்டிய நிலையில் உள்ளனர். எனவே மக்கள் இத்தகைய சலுகைகளை நம்பி ஏமாற்றம் அடையாமல் இன்றைய காலகட்டத்தில் தேவையான சிக்கனமான வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேண்டும். இதனூடாகப் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தை அடையவேண்டும்–என்று கூறினார்.




வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நா.கணேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதனுக்கு சேவை நலன் பாராட்டும், யாழ். மாவட்டத்துக்குப் புதிதாக வருகை தரும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசுக்கு வரவேற்பும் இடம்பெற்றது.

இதன்போது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் வாழ்நாள் கூட்டுறவாளர் என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், சங்கங்கள், கொத்தணிகளால் பொன்னாடை போர்த்தி வாழ்த்து மடலும் வழங்கப்பட்டது.

நிகழ்வின் சிறப்பு அம்சமாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் முன்வைக்கப்பட்ட கூட்டுறவாளர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கான சகாய நலத்திட்டத்தின் காப்புறுதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன்போது அங்கத்தவர்கள் சிலர் காப்புறுதியில் இணைந்து கொண்டனர். (த-14-17)



கீரிமலை முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் கப்பல் திருவிழா கீரிமலைக் கடலில் இடம்பெற்றது. இடப்பெயர்வை அடுத்துக் கடந்த 30 ஆண்டு இடைவெளியின் பின்னர் இடம்பெற்ற இந்தத் திருவிழாவைக் காண அதிக எண்ணிக்கையான அடியவர்கள் கூடினர். (த-86)

## கனடாவில் இருந்து வந்தவர் மோ.சைக்கிள் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 8
புன்னாலைக்கட்டுவன் வீதியில் மோட்டார் சைக்கிளுடன் விழுந்த நிலையில் மீட்கப்பட்ட கனடா நாட்டில் வசிக்கும் யாழ் வாசி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கனடாவில் இருந்து சுகவீனமுற்றுள்ள தனது மாமனாரை பார்ப்பதற்காக வந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று முன் தினம் மாலை 6.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஏழாலைப் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு புன்னாலைக்கட்டுவான் சென்று, அங்கு தனது காணியைப் பார்த்து விட்டு வீடுதிரும்பும்போதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் மோட்டார் சைக்கிளுடன் விழுந்து கிடந்தவரைத் தோட்டக்காரர் ஒருவர் முதலில் கண்டதாகவும், பின்னர் விழுந்தவரின் பொக்கற்றில் இருந்த கைத்தொலைபேசி மூலம் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தியதாகவும் கூறப்பட்டது.

யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்த நிலையில் இருந்துள்ளார். ஒரு பிள்ளையின் தந்தையான 48 வயதுடைய சண்முகன்–கந்தகுமார் என்பவரே உயிரிழந்தவராவார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலை கன்ரீனுக்கு இரண்டு வாரங்கள் காலக்கெடு

### சுகாதாரக்கேடுகளைச் சீர்செய்வதற்கு

யாழ்ப்பாணம், மார்ச் 8
சுகாதாரச் சீர்கேடுகளுடன் நடத்தப்பட்டுவரும் யாழ். போதனா வைத்தியசாலையின் உணவகத்தை அடிப்படை சுகாதார வசதியுள்ள உணவகமாக இரு வார காலத்துக்குள் மாற்றியமைக்குமாறும், இது தொடர்பாக உணவக உரிமையாளர் வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும், அன்றேல் உணவகத்தை மூடுவதற்குரிய நடவடிக்கையைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை மேற்கொள்ளுமாறும் யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் உணவகம் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வருவதாகத் தெரிவித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. உணவக உரிமையாளருக்கு எதிராக ஏழு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

உணவக உரிமையாளர் சார்பில் தோன்றிய சட்டத்தரணி தர்மினி, கேள்வி அறிவித்தல் கோரியபோது வைத்தியசாலை நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் எதுவும் உணவகத்தைக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட பின்னர் நிறைவேற்றப்படவில்லையெனவும், அதுவே சுகாதாரச் சீர்கேட்டுக்குக் காரணம் எனவும் நீதி மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் அவதானித்த நீதிவான் பெ.சிவகுமார், வடமாகாணத்தில் இயங்கி வரும் ஒரேயொரு போதனா வைத்தியசாலையின் உணவகம் நாளாந்தம் பல வைத்தியர்களாலும், வைத்தியசாலை உத்தியோகத்தர்களாலும், நூற்றுக்கணக்கான நோயாளிகளாலும், பொது மக்களினாலும் உணவுத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இரண்டு வருடங்களுக்கு முன்னரும் இது போன்ற சுகாதாரச் சீர்கேடுகள் காணப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. இரு வருடங்கள் கழிந்தும் இவ்வாறான குறைபாடுகள் காணப்படுவதற்கு வைத்தியசாலை நிர்வாகமே பொறுப்பேற்கவேண்டும். நீதிமன்றம் இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்த போதிலும் இது தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் முடிவு எட்டப்பட வேண்டும். அல்லது உணவகத்தை மூடி உணவுத் தேவைக்காக மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என உத்தரவிட்டார்.

இதேவேளை, கடந்த வருடம் வைத்தியசாலை உணவகத்தை நடத்தியவருக்கு எதிராகத் தொடரப்பட்ட இரு வழக்குகளிலிருந்தும் அவரை நீதிமன்றம் விடுவித்தது.

தற்போதைய உணவக ஒப்பந்தகாரரை ரூபா ஒரு லட்சம் சரீரப் பிணையில் விடுவித்த நீதிமன்றம் இம்மாதம் 23 ஆம்திகதி வழக்கு அழைக்கப்படும்போது வைத்தியசாலைப் பணிப்பாளரையும் நீதிமன்றில் முற்படுமாறு பணித்துள்ளது. (த-103)

# சூடுவெந்தபுலவு மக்கள் வீடு கோரிப் போராட்டம்



வவுனியா, மார்ச் 8
வவுனியா சூடுவெந்தபுலவுக் கிராமத்தில் குடியேறிய மக்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளை வழங்குமாறு கோரி நேற்று முன்தினம் சூடுவெந்த புலவு பள்ளிவாசலுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களான 371 குடும்பங்களுக்கு 371 வீடுகள் ஒதுக்கப்பட்டு அது தொடர்பான பட்டியலும் வெளியிடப்பட்டதாகவும், தற்போது இந்த வீடுகள் வேறு ஆள்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், எனவே தமக்குரிய வீடுகளைப் பிரதேச செயலாளர் கையளிக்கவேண்டும் எனக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
இதற்குச் சாதகமான தீர்வு கிடைக்கவில்லையெனில் மீண்டும் தாம் போராட்டத்தில் ஈடுபடுவோம் என அந்தமக்கள்தெரிவித்தனர்.(த-402)

# ரிஷாத்துக்கு எதிராக ஊழல் முறைப்பாடு

கொழும்பு, மார்ச், 08
முறையற்ற விதத்தில் நிதி சேகரித்தமை தொடர்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராகப் பொதுமகன் ஒருவரால் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
மன்னார் பகுதியைச் சேர்ந்த ஒருவராலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்த முறைப்பாடு தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் கூறுகையில்,
முறையற்ற விதத்தில் நிதி சேகரித்தமை தொடர்பில் என் மீது கடந்த வியாழக் கிழமை இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டேன். மேற்படி விசாரணைக்காக நான் பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளேன்.
என் மீதான முறைப்பாடு தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு மக்களுக்கு முடிவுகளை முன்வைக்குமாறு நான் ஆணைக்குழுவின் தலைவரிடம் கேட்டுக்கொள்கிறேன்.
2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ஒருவரினாலேயே மேற்படி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.
(த-10)

# உண்ணாவிரதப் போர் நேற்றும் தொடர்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 8
காணமல்போனவர்களை கண்டறிந்து தருமாறும், அவர்கள் தொடர்பான நிலைப்பாடுகளைத் தெரிவிக்குமாறும் போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணையை முன்னெடுக்க வலியுறுத்தியும் நல்லூர் கோவில் முன்றலில் நேற்று முன்தினம் ஆரம்பமான உண்ணாவிரப்போராட்டம் தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
காணாமல்போனவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட உறவுகள் 'பிள்ளைகளை காணாது தவிக்கும் தாயின் அவலத்துக்கு நீதி இல்லையா?, 'சிறையில் வாடும் எம் உறவுகளின் நிலைதான் என்ன?, 'சர்வதேச போரக்குற்ற விசாரணைகளை உடனடியாக ஆரம்பியுங்கள்', போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட தமிழ் மற்றும் ஆங்கில பதாகைகளை தாங்கியவாறும், காணாமல் போன தமது உறவுகளின் புகைப் படங்களை கையில் ஏந்தியவாறும் கண்ணீர் மல்க கலந்துகொண்டனர்.
இவர்களுடன் இந்தப்போராட்டத்தில் வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனும் கலந்து கொண்டார்.
உண்ணாவிரதப்போராட்டத்தை இரவு பகலாக முன்னெடுப்பதற்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படாத காரணத்தினால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல்போனோரின் உறவுகள் நேற்று முன்தினம் மாலை வீடுசென்று மீண்டும் நேற்றைய தினம் ஒன்றுகூடி தமது போராட்டத்தினை தொடர்ந்தனர். (த-ரி-23)

# பின்தங்கிய கிராமங்களின் விவரம் திரட்டல் ஆரம்பம்

வலி.தென்மேற்கு, மார்ச் 8
வடமாகாணத்தில் மாவட்ட ரீதியாக பிரதேச சபைகளின் கீழுள்ள அபிவிருத்தி அடையாமல் பின்தங்கிய நிலையிலுள்ள கிராமங்களை இனங்கண்டு அபிவிருத்தியடைந்த கிராமங்களாகப் பிரகடனப்படுத்த முன்வந்துள்ள சம்பந்தப்பட்ட அமைச்சு இதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வசதியாககிராமங்களின் விவ ரங்களைச் சமர்ப்பிக்குமாறு பிரதேச சபைகளைக் கோரியுள்ளது.
வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிரதேச சபைகளின் கீழிருக்கும் அநேகமான கிராமங்களில் வசிக்கும் மக்களிடமிருந்து இன்றுவரை சோலைவரி அறவிடப்படாமல் நிலுவையிலிருப்பதனால் கிராமங்களை அபிவிருத்தி செய்யமுடியாத நிலை பிரதேச சபைகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் பிரதேச சபையினால் நிறைவேற்ற முடியாதுள்ளது.
இந்தநிலையில் அபிவிருத்தியடையாமல் பின்தங்கிய நிலையிலுள்ள கிராமங்களை மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ள அமைச்சு, அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய கிராமங்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் பிரதேச சபைகளைக் கோரியுள்ளனர்.
இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலுள்ள பளை, புலோப்பளை ஆகிய இரு கிராமங்கள் பற்றிய விவரங்களை அபிவிருத்தியடைந்த பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கு பிரதேச சபை உள்ளூராட்சி ஆணையாளருக்கு விவரங்களை அனுப்பி வைத்துள்ளது.
பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் உபதவிசாளர் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றபோது இது பற்றி ஆராய்ந்த உறுப்பினர்கள் இதற்கான தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர்.
(த-115)

# வவுனியாவில் இன்று மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 8
யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் என்னால் செயற்பட முடியும் எனும் தலைப்பிலான சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா சுவர்க்கா ஹோட்டலில் நடைபெறவுள்ளது.
யாழ். மாவட்ட மகளிர் அவிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'மாற்றங்களை ஏற்படுத்துவதில் பெண்கள்' என்னும் தலைப்பில் எஸ்.புஸ்பராணி, 'புதிய ஜனநாயக மாற்றத்தில் பெண்கள்' எனும் தலைப்பில் வவுனியா நீதிமன்ற சட்டத்தரணி கே.தயாபரன், 'சமுதாய மாற்றத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் சிறுவர்களும்' எனும் தலைப்பில் வவுனியா மாவட்ட செயலக உளவளத்துணை இணைப்பாளர் ஆர். அம்பிகைபாலன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (த-14)


# தேசிய அரசில் சு.கவுக்கு 14 அமைச்சுப் பதவிகள்

கொழும்பு, மார்ச் 8
தேசிய அரசில் சுதந்திரக் கட்சிக்கு 14 அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
சில முக்கியமான அமைச்சுப் பதவிகளை கோருவது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.
தேசிய அரசில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் தீர்மானங்களை எடுக்க நியமிக்கப்பட்டுள்ள குழு, இது குறித்து பேச்சு நடத்தவுள்ளது.
கல்வி, சமுர்த்தி, அரச நிர்வாகம், போக்குவரத்து உள்ளிட்ட முக்கிய சில அமைச்சுக்களை தமக்கு வழங்க வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
நிர்வாக நடவடிக்கைகளுக்கு முக்கியமான அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென கட்சியின் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் ஏற்கனவே ஆரம்ப இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (த)

யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது
ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD
P. ஜெய்சங்கர்
கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டு சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.
தொடர்புகட்கு : 364 A நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, நல்லூர்.)
தொலைபேசி : 021 221 7944
கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி.
தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் எஸ்.ஆர் ஜெயப்பிரகாசம்
(ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி, பிரதேச செயலகம்–உடுவில்)

மறைவு
06 . 03 . 2011
எங்களுடன் வாழ்ந்து எம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கும் எங்கள் பாசமிகு அப்பாவே! நான்கு ஆண்டுகள் ஓடிக்கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
ஏன் எம்மைத் தவிக்க விட்டுச் சென்றீர்கள்
காலங்கள் காயத்தை மாற்றவில்லை
நாம் வாழும் காலம் வரை எம்மோடு வாழ்வீர்கள்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.
தெகிவளை, கொழும்பு
(56620)(4.3.6)

31 ஆம் ஆண்டு நினைவு | 08 ஆம் ஆண்டு நினைவு

குருநாதர் சின்னத்துரை
(முன்னாள் கிராம சேவையாளர்)

சின்னத்துரை சிவசுதன் B.A. (Hons)
(ஆசிரியர், யா/ வரணி மகா வித்தியாலயம்)
தோற்றம் : 24★11★1933 | 10★02★1975
மறைவு: 12★01★1984 | 08★03★2007
எம் இரு விழிகள் சொரிந்த கண்ணீர் இரத்தமாகி வழிகின்றது. - நீர் சென்ற வழிதேடி உமைக்காண எம் உள்ளம் அலைகின்றது.
உள்ளத்தில் அழுக்கின்றி உண்மையில் வாழ்ந்தீர்கள்,
முற்றிலும் மாறுபட்ட முழுமதியாய் வாழ்ந்தீர்கள்.
ஓங்கிய உங்கள் குரல்கள் - இனி என்று நாம் கேட்போம்
ஓ உற்ற உறவே எமை விட்டு ஏன் பிரிந்து சென்றீர்
ஓடும் நதி போல ஓடி உழைத்தெம்மை பாடும் பறவை போல் பாசத்தால் வாழவைத்து துயில்கின்ற நீங்கள் ஓர்நாள் உயிர்பெற்று வரும் வேளை
மீண்டும் உமைக்காண்போம் என காத்திருக்கின்றோம்.
குடும்பத்தினர்.
கைதடி வடக்கு, கைதடி.
இல. 71, கோயில் வீதி, கொக்குவில்கிழக்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்டத்தினால் பயனாளிகள் மகிழ்ச்சி

வலி.தென்மேற்கு, மார்ச் 8

வீட்டுத் திட்டத்தில் இணைந்து கொண்டு கடனைப் பெற்ற பயனாளிகளுக்கு தந்தையினால் வழங்கப்பட்ட சலுகை தற்பொழுது தனயனால் மேலும் ஒரு படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயனாளிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் 1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 10 இலட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்களில் உணவு முத்திரை உடையவர்களுக்குச் சலுகை வழங்க முன்வந்துள்ள மைத்திரி அரசு 1989 ஆம் ஆண்டு டிசெம்பர் வரை. கட்டவேண்டிய நிலுவை இருக்குமானால் அந்தப் பணத்தைக் கட்ட வேண்டாம் என்று அறிவித்துள்ளது.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரின் இந்தத் தீர்மானத்தை அடுத்து கடன் பெற்றவர்களின் விவரங்களைத் திரட்டுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஐ.தே.கட்சியினர் ஆட்சிக் காலப் பகுதியில் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சராக இருந்த ஆர்.பிரேமதாசவினால் 1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 10 இலட்சம் வீட்டுத் திட்டத்தில் இணைந்து கொண்டு கடனைப் பெற்றவர்களில் உணவு முத்திரை உடையோர் 1988 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்குப் பின் நிலுவை இருக்குமாயின் கட்டவேண்டாம் என்று அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் தற்போதைய அரசில் வீடமைப்பு அமைச்சராக இருக்கும் பிரே மதாசவின் மகன் 1984 ஆம் ஆண்டு தந்தையினால் ஆரம்பிக்கப்பட்ட 10 இலட்சம் வீட்டுத் திட்டத்தில் கடன் பெற்றவர்களில் உணவு முத்திரை உடையவர்கள் 1989 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை உள்ள நிலுவையைக் கட்ட வேண்டாம் என்று அறிவித்துள்ளார்.

அமைச்சரின் இந்த அறிவித்தலை அடுத்து கடன் எடுத்த பயனாளிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (த-115)

## அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலய பரிசளிப்பு விழா

வலி.வடக்கு, மார்ச் 8

மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்ட 6ஆவது ஆண்டு நிறைவு நாளும் பாடசாலை பரிசளிப்பு விழா மற்றும் தங்க மலர் வெளி யீடும் இன்று ஞாயிற்றுக் கிழமை பாட சாலை மண்டபத்தில் அதிபர் சி.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி தெல்லிப்பழை கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரனும், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற இலங்கை வங்கி யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.விக்கினராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.


ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயப் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ மா.அகிலேஸ்வரக் குருக்கள் வழங்கவுள்ளார். (த-86)


advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து பூதத்தம்பி

(இளைப்பாறிய உத்தியோகஸ்தர்- தபாலகம் கொத்மலை)



யாழ். சாவகச்சேரி மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பூதத்தம்பி 04.03. 2015 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சரவணமுத்து, நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகப்பா - முத்துபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணி அவர்களின் அன்புக் கணவரும், தர்மசீலன் (லண்டன்), சிவஞானசீலன் (லண்டன்), தேவபூசணி (கனடா), ஆனந்தசீலன் (லண்டன்), சிவதர்சினி(லண்டன்), சீலன் (லண்டன்), அற்புதசீலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வர்களான செல்லத்துரை, பொன்னு, தங்கம், முத்துகுமாரு, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, நேசம்மா, சின்னத்தம்பி, மற்றும் அன்னபூரணம்(கனடா), காலஞ்சென்றவர் களான செல்லத்துரை, பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கந்தையா(இலங்கை) அவர்களின் அன்புச் சகலனும், ஸ்ரீதர்(லண்டன்), கிருபா(நெதர்லாந்து), கீதா(லண்டன்) ஆகியோரின் பெரிய தந்தையும், கமலாதேவி, வசந்தி, சிவானந்தம், மாலதி, தவராசா, ஜலஜா, காலஞ்சென்ற சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், வேல்ராஜ், பாரஹா, சுகந்தி, நீலன், மீரா, பிரதீபன், மஞ்சுளா, வினோதன், ஜனா, பிரகாஷ், விதுரன், கிரிசான், ஜனன், எட்வின், ஜொயனா, கிஷாணி, கிருஷிகா, பிரவின், நிருஷி, கீர்த்தனா, ஆரணி, குகஜித், சர்மிஜா ஆகியோரின் அன்புப் பேரனும், ஹருணி, ஹரீஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் பார்வைக்கு வைக்கப்பட்டு தகனக்கிரியைகள் 10.03.2015 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


வீட்டுமுகவரி
49 Carr Road, Northolt,
Middlesex, UB5 4RA, UK.
442084233428
447763316944
19052099150 (கனடா)

தகவல்:
மா. சிவானந்தம்
இல.32, பாடசாலை வீதி,
மகாரம்பைக்குளம், வவுனியா.
T.P.077 829 0977

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் மனோராஜ்

(முன்னாள் கணித ஆசிரியர் - கொ/இரத்மலானை இந்துக் கல்லூரி)



யாழ். கைதடி நுணாவிலைப் பிறப் பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மனோராஜ் 01.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசறோஜினி (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் (ஓய்வு பெற்ற பொறியியலாளர்) - தையல்நாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை) தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் (முன்னாள் பிரதம எழுதுவினைஞர் - யாழ். கல்வித்திணைக்களம், முன்னாள் உபதலைவர் - நகரசபை, சாவகச்சேரி) - அன்னபூரணம் (ஓய்வுபெற்ற ஆசிரியை - மகளிர் கல்லூரி சாவகச்சேரி) தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற சதாசிவம் (சக்கடத்தார்) தம்பதியரின் அருமைப் பேரனும், மனோகரிதேவி, மனோராணி (பிரான்ஸ்), மனோரஞ்சனா (பிரான்ஸ்), மனோரஞ்சினி, மனோரதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (சட்டத்த ரணி - சாவகச்சேரி) மற்றும் பாலகாந்தன் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் - திருகோணமலை), பாலகுமாரன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - நகரசபை சாவகச்சேரி, Dr. பாலச்சந்திரன் (வாழைச்சேனை), பாலஜெயந்தி (பிரதி அதிபர் - யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்), பாலஜீவினி (பிரதி அதிபர் - மகளிர் கல்லூரி சாவகச்சேரி), Dr. பாலசுலோஜினி (அமெரிக்கா), இராமலிங்கம், குமார் (பிரான்ஸ்), நிக்கலஸ் பெர்ணான்டோ (பிரான்ஸ்), தனபாலன், காலஞ்சென்ற மனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற மோகனேஸ்வரி (முன்னாள் ஆசிரியை - கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), ஞானசோதி, செல்வமலர், Dr. பூமணி (வாழைச்சேனை), விஜயகாந்தன் (ஓய்வுபெற்ற அதிபர்), சிவகுமார் (மேற்பார்வையாளர் - Sierra), Dr. கருணானந்தா (அமெரிக்கா), ஸ்ரீமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும், உடன் பிறவாச் சகோதரரும், Dr. முத்துக்குமாரசாமி அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2015) திங்கட்கிழமை பிரான்ஸ் நேரப்படி பிற்பகல் 2.00 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மலர்"
கல்லூரி ஒழுங்கை,
சாவகச்சேரி.

(சகோதரி 077 181 7854)
திருமதி பா.சிவகுமார் (மைத்துனி)

## மரண அறிவித்தல்



தோற்றம் : ★ 30 ★ 09 ★ 1942

மறைவு: ★ 04 ★ 03 ★ 2015

### திருமதி சந்தியா றோஸ்மேரி (பொன்னம்மா)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தியா றோஸ்மேரி 04.03.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியா (துரைஐயா- ஓய்வு பெற்ற தபால் அதிபர்)வின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மார்க்கு-ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி-எலிசம் தம்பதியரின் அன்பு மருமகளும், மரியநாயகி (தங்கமணி-ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற மரியதாஸ் (ராசா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திரேஸ்மலர், அன்னம்மா, செல்வராசா மற்றும் இராசாத்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சுட்சன் (பிரான்ஸ்), தவன் (பிரான்ஸ்), ஜீவன், ரூபன், விமலன் (கனடா), சந்திரிகா (கனடா), சிம்சன் (கனடா), நிந்தியா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும், வெஜினா (பிரான்ஸ்), லவா, நிர்மலா, சுமித்திரா, மாலா, கிங்சன் (விலின்-கனடா), றாதா, றசி (இந்தியா) ஆகியோரின் மாமியும், சறேந் (கனடா), அர்ச்சிதா (கனடா), மெல்டன் (கனடா), சயோ, சயோன், நிது, டிபோன், விதுசன், றோஸ்மின் (இந்தியா), சிமோனி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.03.2015) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பி.ப. 3.30 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24/6, மத்தியகிழக்கு வீதி, றெக்கிளமேசன், குருநகர், யாழ்ப்பாணம். 077 82 10291

தகவல்:
பிள்ளைகள்

## மரண அறிவித்தல்



### பொன்னையா செல்லத்துரை

யாழ். நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா-செல்லத்துரை 05.03.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், பாலசுந்தரம், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், வன்னியசிங்கம், மற்றும் மல்லிகாதேவி, மகேஸ்வரி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் மல்லிகாதேவி, சிவமலர், மனோன்மணி, முருகானந்தம், ரவீந்திரன், மோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலராஜ், பாலறஜனி, தீபா, வினோபா, வினோத், சிந்துஜா, சிஜாந், ஜெயந், மயூரா, பவித்திரா, அனித்தா, முகிதா, வாகீசன், சோபிகா, யதீசன், அஜிந்தா, சஞ்சீபன், நிவேதா, சுவேருதா, சுஜித்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஜயனி, மெலினா, ஆர்த்தி, ஆரணி, நிதியா, ஜனிஸ், எவின், மிரா, அஸ்வின், ஹரி, லெயானியா, அலிஷா, அரோன், லிலி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08/03/2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவிடம் நம்பிக்கை வைப்போம்

நம்பிக்கை சோதிக்கப்படும் போது அசையாத நம்பிக்கையோடு இருந்தார்கள் இறை திருத்தூதர்கள். கிறிஸ்துவின் அன்பிலிருந்து எம்மைப்பிரிக்கக் கூடியது எது? வேதனையா, நெருக்கடியா, இன்னலா, பட்டினியா, ஆடையின்மையா, இடரா, சாவா, எது தான் எம்மைப் பிரிக்க முடியும். எவ்வித சோதனைகளையும் வெல்வதற்கான ஒரே வழி கிறிஸ்து இயேசுவிடம் நம்பிக்கை வைப்பதாகும். இந்த

**தவக்காலச் சிந்தனை**

மண்ணக வாழ்வில் எமக்குச் சோதனைகள் நிறைய உண்டு. நாம் இறைவனிடம் வைத்துள்ள நம்பிக்கை உயிரோட்டமானதாக இருப்பதால் "அலகை" சோதனைகளைத் தருகிறான். எமக்குச் சோதனைகள் வரவில்லை என்றால் அதன் பொருள் எமது நம்பிக்கை செத்த நிலையில் இருக்கிறது என்பது தான். நம்பிக்கை தான் வாழ்க்கை. நம்பிக்கை வைத்ததால் தான் ஆண்டவர் பல நன்மைகளைச் செய்தார். நம்பிக்கையோடு அழைத்தால் ஆண்டவர் நிச்சயம் கைதூக்கி விடுவார். எனவே, கடவுளின் திருவுளத்துக்கு பணிந்து நடப்பதே ஒவ்வொரு கிறிஸ்தவனின் புனித வாழ்வுக்குரிய பாதையென்று அண்மையில் மறை உரையில் கூறினார் நமது திருத்தந்தை பிரான்சிஸ். எனவே என்றும் வாழும் இறைவன் எங்களை இத் தவக் காலத்தில் புதுப்பித்து அன்பால் எங்களை நிறைத்து எமது கருவியாகப் பயன்படுத்து வாராக. நோன்பு மற்றும் செப வேண்டுதலில் நிலைத்திருந்து நாம் எமது ஆண்டவர் இயேசுவின் நம்பிக்கைக்குரிய நண்பராவோம்.

ஏ.றெக்ஸ், ஈச்சமோட்டை.

# இயல் இசை நாடக கலைஞர்களுக்கு களம் அமைத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 8

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர் வருடாந்தம் நடத்தும் இயல் இசை நாடக விழாவை எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடத்த வுள்ளனர்.

கவியரங்கு, பட்டிமன்றம், இசையரங்கு (வாத்தியங்கள் உட்பட) வில்லுப்பாட்டு, நடனம், சமூக, அரச நாடகங்கள், கூத்து போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்ள விரும்பும் கலைஞர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக இல: 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

## 'செயற்பட்டு மகிழ்வோம்' போட்டிகள் நாளை

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட சண்டிலிப்பாய் கல்விக் கோட்டமட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான "செயற்பட்டு மகிழ்வோம்" போட்டிகள் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டியில் குடும்பப் பாடசாலை மட்டத்தில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகள் உரிய நேரத்துக்கு சமூகமளிக்குமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)


## வர்த்தக வாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களுக்கு முகவர்கள் தேவை

ABC ஸ்டடி லிங்ஸ் பிரைவேற் லிமிட் (இந்தியா) (ABC Study Links Pvt. Ltd) ஆகிய நாம், இலங்கையில் மினஸ்கா உயர் கல்வி ஆலோசகர்களுடன் பங்குடைமையில் இணைந்துள்ளோம். இந்நிறுவனமானது இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, நியூசிலாந்து, ஜேர்மனி, இத்தாலி, கனடா, சீனா, மலேசியா போன்ற நாடுகளில் உயர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வெளிநாட்டு கல்வி ஆலோசனைகளில் 27 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளது.

எமது விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் செயற்படுவதற்காக முகவர்களை தேடுகின்றோம்.

பொருத்தமான விண்ணப்பதாரிகள், மாணவர்களுக்கான ஆலோசனை அளிக்கும் வகையில் அலுவலக இடம் மற்றும் அடிப்படை வசதிகளை கொண்டிருப்பவராக இருத்தல் அவசியம் தேவையான பயிற்சிகள் எம்மால் இலவசமாக வழங்கப்படும்.

**ABC STUDY LINKS PVT. LTD.** (India)
Sri lanka office: MINASKA HIGHER EDUCATION CONSULTANTS
Level 1-1 Deanstone House, 1 Deanstone Place, Galle Road, Colombo 3.

**CONTACT: 0776 074 317**

## விண்ணப்பம் கோரல்

பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. பயிற்றப்பட்ட ஆண் /பெண் தாதியர்
2. தாதிய பயிலுநர் ஆண் /பெண்

விண்ணப்பங்கள் நேரிலோ தபால் மூலமோ 14.03.2015 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கும்படி அனுப்பும் வண்ணம் கோரப்படுகின்றனர்.

பணிப்பாளர்,
மனிதவளம்,
நொதேன் சென்றல் வைத்தியசாலை,
342, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

## LCBT Campus

**Skills Development Programs - 2015**

- வேலையற்ற இளைஞர்கள்/யுவதிகள் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கான தொழில்திறன் அபிவிருத்தி கற்கைநெறிகள் விசேட புலமைப்பரிசில்கள் மூலம் வழங்கப்படவுள்ளன.
- கற்கைநெறிகள் முடிவில் தொழிற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு சேதிகள் தனியார் நிறுவனங்களில் ஒழுங்கு செய்து தரப்படும்.
- கற்கைநெறிகளின் முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கற்கைநெறிகள்

01. Diploma in Hotel Management/ Hospitality Management
02. Diploma in Travel and Tourism
03. International Diploma in English
04. Diploma in Computing and Networking
05. Diploma in Beauty Therapy
06. Diploma in Sales and Marketing
07. Diploma in Teachers Training (English / Pre School)

ETS AIH CTH CONFEDERATION OF TOURISM & HOSPITALITY

மேற்குறிப்பிட்ட கற்கைநெறிகள் யாவும் பிரசித்திபெற்ற ETS (USA), CTH, AIH (Australia) நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்படும்.

மேலதிக தகவல்களுக்கு
**LCBT Campus**
320 A 2/1, Main Street, Jaffna
0775052643

பயிற்சி நெறிகள் நடைபெறும் இடங்கள்
01. யாழ்ப்பாணம்
02. கிளிநொச்சி
03. மன்னார்
04. முல்லைத்தீவு

## ஐரோப்பாவில் மருத்துவம், பொறியியல் கற்க ஓர் அரியவாய்ப்பு

எம்முடன் இணைவதால்...



- மிகக்குறைந்த செலவில் கற்கைநெறி
- உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்கள்
- 100% வீசா உத்தரவாதம்
- பட்டத்தின் பின் ஐரோப்பாவில் பணிபுரியும் வாய்ப்பு
- தற்போது 300 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவ, மாணவிகள் உயர்கல்வியை கற்றுவருகின்றனர்
- நேர்முகபரீட்சை, வங்கிமீதுதி, உறுதிகடிதங்கள், IELTS இன்றியும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்
- கடன் வசதிகள் ஒழுங்கு செய்துதரப்படும்.
- உங்கள் எதிர்கால வாழ்க்கையை ஐரோப்பாவில் தொடர ஒரு வாய்ப்பு
- கோடைகால விடுமுறையில் ஐரோப்பாவில் வேலைவாய்ப்பு

Spot Admission & Schlorship

**STUDENT CONSULTANCY UNIT**
**RED CROSS CONSULTANCY SERVICES**

Consultancy arm of the Sri Lanka Red Cross Society

3rd Floor, Red Cross BLDG, No.104, Dharmapala Mw, Colombo 07.
Tel : 011 434 7070 Mob : 077 670 0009, 077 670 2222, 076 671 6083
Fax : 011 268 2876 Email : admission@rcscu.lk Web : www@rcscu.lk

## கட்டடம் வாடகைக்கு

சிறிய அலுவலகங்களுக்கு ஏற்ற இடம் Stanley வீதியில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 574 8095

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு பருத்தித்துறை வீதியில் சந்திரசாயி பாபா நிலையத்திற்கு அருகில் உள்ள 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு. 0776 113 977

## மலிவு விற்பனை

புத்தம் புதிய TOSHIBA LED Tv(23") SINGER FRIDGE, கண்ணாடி அலுமாரி என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 929 6979 / 077 220 8268

## VACANCIES

**Marketing EXECUTIVE (Male & Female)**

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as **Marketing EXECUTIVE**

**Requirements**
- GCE (A/L) Qualified
- Below 35 years old (School leavers may apply for trainee position)
- Good communication skill in English & Tamil

**Benifits**
- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Motorbike allowances
- Incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

If you believe that you are the right cantidate,
Please e-mail or contact immediately
Branch Manager: G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130



Pioneer House (PVT) Ltd.
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
**கிருஷ்ணசாமி நாமகள்**
(B.F.A. Music)

Congratulations

இன்று (08.03.2015) வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரத்தில் இசைத்துறையில் கலாவித்தகர் பட்டத்தைப் பெற்றுக்கொள்வதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேன் மேலும் பல்வேறு விருதுகளையும் பெற வாழ்த்துகின்றோம்.

கல்வயல், சாவகச்சேரி

வாழ்த்துவோர், சகோதர- சகோதரிகள்


## பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள், தொழில் வாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் துறைசார்ந்த பிரிவில் கடமையாற்றும் இளைஞர்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு!!!

### மின்சாதனங்கள் சீர்செய்தலும் மீள்சுற்றுக்குமான பயிற்சி

வடமாகாணத்திலுள்ள தொழிநுட்பவியலாளர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல் என்ற அடிப்படையில் இளைஞர் யுவதிகளிற்கான தொழில்நுட்பத்திறன் விருத்திப் பயிற்சியூடாக உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி ஈடுபடக்கூடிய தொழில்வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் வடமாகாண தொழில்துறைத் திணைக்களம் வேலைவாய்ப்பிற்கான தொழில்நுட்பத்திறன் விருத்திப் பயிற்சியை தொடர்ந்து வழங்கிவருகின்றது. அந்தகையில் மேற்படி பயிற்சியானது யாழ்ப்பாணத்தில் இரு பிரிவாக நடைபெறவுள்ளது.

**பிரிவு: I (வார நாள்கள் பயிற்சி)**

நாள் ஒன்றிற்கு ரூபா 200 ஊக்குவிப்புடன் கூடிய மூன்று மாத கால இலவச தொழிற்பயிற்சி.

**பயிற்சியில் இணைவதற்கான தகைமைகள் :**
- வயதெல்லை 18 – 35 வருடங்கள்.
- கல்வித் தகைமை – O/L சித்தியடைந்திருத்தல் வேண்டும்
- தொழில் செய்வதற்கு ஆர்வமும் விருப்பமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்

**பிரிவு: II (சனி மற்றும் ஞாயிறு)**

மூன்று மாத கால இலவச தொழிற்பயிற்சி.

**பயிற்சியில் இணைவதற்கான தகைமைகள் :**
- துறைசார் தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும்.
- துறைசார் தொழில் புரிவதற்கான உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்.

கற்கை நெறியின் பின்னர் தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி நெறி எதிர்வரும் பங்குனி மாதம் 24ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயிற்சி பெற விரும்புபவர்கள் தங்களது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை பங்குனி மாதம் 18ஆம் திகதிக்கு முன்பாக பணிப்பாளர், தொழில்துறைத் திணைக்களம், வடமாகாணம், கைதடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உள்ள தொழில்துறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகவும் மேற்குறிப்பிட்ட விவரங்களை உள்ளடக்கிய தங்களது சுயவிவரத்துடன் கூடிய விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கவும். பயிற்சியாளர்கள் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப் படுவார்கள். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் பயிற்சிக்கான இடம் தீர்மானிக்கப்படும். மேலதிக விவரங்களை www.np.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

குறிப்பு : விண்ணப்பதாரர் பயிற்சி நெறியின் பெயரை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

| தொடர்புகளுக்கு | தொலைபேசி இல: | |
|---|---|---|
| 1. பணிப்பாளர், | : 0213202413 | – தலைமை அலுவலகம் |
| தொழில்துறைத் திணைக்களம், | : 0217538381 | |
| வடமாகாணம், கைதடி, யாழ்ப்பாணம். | : 0212223546 | – யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகம் |

2. அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தொழில்துறைத் திணைக்களம்,
பிரதேச செயலகம்


(சி.1981) (45.3.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட் திரு ரூபன் மரியாம்பிள்ளை

# பாலதீவில் பெருவிழா

பாலதீவு புனித அந்தோனியார் திருவிழா இன்றாகும்.



பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத் தல பெருவிழா இன்று நடைபெறுகிறது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை திருநாள் திருப்பலியை ஒப்புக்கொடுக்கிறார்.

குருநகர் – அல்லைப்பிட்டி – வலைப்பாடு முழங்காவில் – இரணைமாதாநகர் – பள்ளிக்குடா பூநகரி – நாவாந்துறை – ஆனைக்கோட்டை – நவாலி – மண்டைதீவு – யாழ்ப்பாணம் – ஊர்காவற்துறை – மெலிஞ்சிமுனை – பேசாலை –மன்னார் – ஆகிய இடங்களைச் சோந்த 20 ஆயிரம் யாத்திரிகர்கள் பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தல பெருவிழாவில் இம்முறை கலந்து கொள்கின்றனர்.

**கத்தோலிக்க மக்களின் கடல் கடந்த யாத்திரைகள்**

யாழ் மறைமாவட்டக்கத்தோலிக்க மக்களின் தவக்கால வாழ்வோடு கடல் கடந்த யாத்திரைகள் நீண்ட காலமாகவே பின்னிப் பிணைந்தவை.

தவக்காலம் ஓர் அருளின் காலம் – அன்பு உறவின் காலம் – இறைவனோடும் மனிதரோடும் உடைந்த உறவை சரிசெய்யும் காலம். இக்காலத்தில் மேற்கொள்ளப்படும் செபம் – தபம் – தியாகம் – திருயாத்திரைகள் என்பன தவக்கால வாழ்வுக்குப் பெரும் துணை புரிகின்றன. அந்த வகையில் பெருந்தொகையான மக்கள் இந்தத் தவக்காலத் திருயாத்திரைகளில் பங்கு பற்றுகின்றனர்.

முதல் வாரம் பூநகரிப் பங்குடன் இணைந்த மண்டைக்கல்லாறு புனித அந்தோனியார் பெருவிழாவும், இரண்டாம் வாரம் நெடுந்தீவு பங்குடன் இணைந்த கச்சதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும், மூன்றாம் வாரம் வலைப்பாடு பங்குடன் இணைந்த பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும், நான்காம் வாரம் நெடுந்தீவு பங்குடன் இணைந்த கற்கடதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும் தவக்காலத்தின் நான்கு வாரங்களுக்கும் கடல் கடந்த தவக்கால யாத்திரைகளாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் இரண்டாம் வாரம் கொண்டாடப்படும் கச்சதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும் மூன்றாம் வாரம் கொண்டாடப்படும் பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும் சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த இரு யாத்திரைத்தலங்களிலும் மற்றைய யாத்திரைத் தலங்களை விட அதிக யாத்திரிகர்கள் வந்து குவிகின்றனர். திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

**பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழா**

மூன்றாம் வாரம் கொண்டாடப்படும் பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழா சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. யாழ் மன்னார் மறைமாவட்டங்களின் கரையோர கத்தோலிக்க மக்களை இணைக்கும் திருவிழாவாக இது அமைகிறது. ஏறக்குறைய 20 ஆயிரம் யாத்திரிகர்கள் ஆண்டு தோறும் இங்கு வருகிறார்கள்.

இங்குசிறப்பாகக்குறிப்பிடப்படவேண்டியது என்னவென்றால் கச்சதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும் பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும் அரச வர்த்தமானி அறிவிப்புச் செய்யப்பட்ட விழாக்களாகும் என்பதாகும். இந்த கடல் கடந்த நான்கு யாத்திரைத்தலங்களும் புனித அந்தோனியாரின் யாத்திரைத் தலங்களாகும் என்பது சிறப்புமுக்கியத்துவம்பெறுவதாகும். பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவை ஆரம்பம் முதல் அல்லைப்பிட்டி பங்கு மக்களே முன்னின்று நடத்தி வந்ததாக அறிய வருகிறது. இன்றும் கொடி ஏற்ற நிகழ்வை அல்லைப்பிட்டி பங்கு மக்களே முன்னின்று நடத்துகின்றனர்.

மறைந்த யாழ் ஆயர் தியோகுப்பிள்ளையின் காலம் முதல் இரணைதீவு வலைப்பாட்டுப் பங்குத் தந்தையே பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவை நிர்வகித்து வந்துள்ளார். நீண்ட காலம் இரணைதீவு வலைப்பாட்டுப் பங்குத்தந்தையாக பணியாற்றிய வெள்ளைக்காரக் குருவானவராகிய கொன்சால்வேஸ் அடிகளார் பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவைச் சிறப்பாக நிர்வகித்து வந்துள்ளார். அவர் பின்னர் இறைபணியில் இருந்து ஓய்வு பெற்று நாடுதிரும்பி இறைபதம் எய்தினார். 1990ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னா இரணைதீவில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் முழங்காவில் பகுதியில் காட்டை அழித்து இரணைமாதாநகரை உருவாக்கிய பின்னர் வலைப்பாட்டு பங்கினர் பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவைக் கொண்டாடி வருகின்றனர்.

கடந்த ஐந்து வருடங்களாக பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவை வலைப்பாட்டுப் பங்குத் தந்தை ஏ.வி. சில்வெஸ்ரதாஸ் அடிகளார் நிர்வகித்து வருகிறார்.

அவர் பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் பற்றித் தெரிவிக்கும்போது இந்த யாத்திரைத்தலம் கிளிநொச்சி மாவட்ட பூநகரிப் பிரதேச சபையின் கீழ் வருகிறது. வர்த்தமானி அறிவிப்பு செய்யப்பட்ட இத்திரு விழாவுக்குப் பூநகரிப் பிரதேச சபையினர் 20 ஆயிரம் ரூபாவை மட்டும் தருகின்றனர். இவ்வாண்டு 10 தற்காலிக மலசலகூட வசதிகளைச் செய்து தந்துள்ளனர் எனத்தெரிவித்தார்.

**அழகியதீவு**

வலைப்பாட்டுக்கு மேற்கே யாழ் நகருக்கு கிழக்கே அமைந்துள்ள ஒருகிலோமீற்றர்பரப்பளவு[illegible] ஓர் அழகிய தீவே பால[illegible] பாற்கடல் என்று அழைக்கப்படும் இந்தக் கடற்கரை அதிக ஆழமற்று பால்போல் பரந்து செல்லும் கடற் பரப்பைக் கொண்டது. குஞ்சு குருமன்கள் ஏல்லாம் எப்போதும் இக்கடலில் மூழ்கிக் கும்மாளம் அடிப்பதைக் காணலாம்

எந்தப் பயமும் இன்றி குழந்தைகள் சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள், ஆண்கள் என எல்லாரும் எப்போதும் குளிக்கக் கூடிய கடல் இதுவாகும். திருப்பலி முடிந்தவுடன் பெருந்திரளான மக்கள் –குருக்கள் உட்பட – கடற்குளிப்பில் ஈடுபடுவது இங்கு ஒரு சிறப்பம்சமாகும்.

மற்றைய கடல்களைப்போல் அதிக உப்பில்லாது பால்போல் இக்கடல் அமைந்திருப்பதையும் மக்கள் எங்குமில்லாதவாறு சோப்பு போட்டுக் குளிப்பதையும் இங்கு குறிப்பாகக் காணலாம். வள்ளங்களைத் தொழிலாளர்கள் இக்கடலில் குப்புறப் போட்டுக் கழிவுவதையும் காணலாம். பாலதீவுக்கு வருகின்ற தொழிலாளர் இதை ஒரு கட்டாய வேலையாகவே செய்கின்றனர்.

பாலதீவைச்சுற்றி 20 அந்தோனியார் சொரூபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாதா சொரூபங்களையும் இங்கு காணக்கூடியதாக உள்ளது.

இங்கு தொழில் செய்ய வருவோர் இந்தச் சொரூபங்களை அமைப்பதாகவும் அப்பிரதேசத்தை தமது இடமாகக் கருதுவதாகவும் திருவிழாக்கால்ங்களில் தாம் அமைத்த சொரூபங்களுக்கு கிட்டவாகவே வந்து தங்குவதாகவும் அறிய வருகிறது. ஏற்கனவே வருபவர்களும் இவர்களின் இடங்களை இவர்களுக்கென விட்டுவைப்பதாகவும் அறிய வருகிறது.

வலைப்பாட்டுப் பங்குத்தந்தையும் பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தலப் பரிபாலகருமான ஏ.வி. சில்வெஸ்ரதாஸ் அடிகளார் யாத்திரிகரின் வசதிகளுக்காக 20 நிரந்தர மலசலகூட வசதிகளைச் செய்துள்ளார்.

மன்னார் மக்களும் கலந்து கொள்ளும் பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தலப் [illegible] வந்த [illegible] இவ்வாண்டு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகையை அழைத்ததாகவும் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை முதற் தடவையாக 2011 ஆம் ஆண்டிலும் பின்னர் 2014ஆம் ஆண்டிலும் மேற்படி பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தலப் பெருவிழாவை ஒப்புக் கொடுத்ததாகவும் ஏ.வி. சில்வெஸ்ரதாஸ் அடிகளார் தெரிவிக்கிறார்.

பாற்கடல் என்று அழைக்கப்படும் இந்தக்கடற்கரை அதிக ஆழமற்று பால்போல் பரந்து செல்லும் கடற் பரப்பைக் கொண்டது. குஞ்சு குருமன்கள் எல்லாம் எப்போதும் இக்கடலில் மூழ்கிக் கும்மாளம் அடிப்பதைக் காணலாம்
எந்தப் பயமும் இன்றி குழந்தைகள் சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள், ஆண்கள் என எல்லோரும் எப்போதும் குளிக்கக் கூடிய கடல் இதுவாகும்.

இவ்வாண்டு ஐந்து நாள்கள் கொண்டாடப்படும் பாலதீவுப் பெருவிழா இனிவருங்காலங்களில் அதிகரிக்கப்படலாம். இவ்வாண்டு வேஸ்பா ஆராதனைகளை திருமகன் அடிகளாரும் தயாபரன் அடிகளாரும் நிகழ்த்தவுள்ளனர் என்றார்.

1964ஆம் ஆண்டு புயல் அடித்த போது ஆலயத்துக்கு அருகில் இருந்த புளிய மரம் ஆலயத்தின் மேல் விழுந்து கொட்டில் ஆலயம் முற்றாகச் சேதமடைந்த போதும் புனித அந்தோனியார் சொரூபம் புதுமையாக எவ்வித சேதமுமின்றி இருந்துள்ளது. அந்தப் புனித அந்தோனியார் சொரூபமே இன்றும் ஆலயத்தில் வைத்து விழாக் கொண்டாடப்படுகிறது.

இதன் பின்னா இங்கு தொழில் செய்ய வந்த குருநகரைச் சேர்ந்த சிறகு வலைத் தொழில் செய்யும் தொழிலாளர் பலரும் இணைந்து இன்று காட்சி தரும் ஆலயத்தை கட்டி எழுப்பியுள்ளனர். எஸ்.எம். ஜே.பயஸ் என்பவர் துணை புரிந்தார். சிலுவைப்பாதை சொரூபங்களைக் கட்டி எழுப்ப எமிலியானுஸ் ஜெயராஜசிங்கம் என்பவர் துணைபுரிந்தார். பாக்கிய முத்து சவுரியான் என்பவர் குடிநீர் வழங்கலில் பெருந்துணை புரிந்தார். பெரிய தொட்டி ஒன்று அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வந்தாலும் இப்போது கடற்படையினர் இப்பணியை ஆற்றுகின்றனர்.

குருநகரைச் சோந்த கி.கிறிஸ்தோப்பர் பொன்னன் மகேந்திரன் ஆகியோர் மேற்படி தகவல்களைத் தந்து உதவினர.

**1970ஆம் ஆண்டு நடந்த சோக நிகழ்வு**

1970ஆம் ஆண்டு பாலதீவு பெருவிழாவுக்குச் சென்ற யாத்திரிகர்களுக்கு நடை பெற்ற சோக நிகழ்வை – இன்றைய இளைய சமூகத்தினர் பெரிதும் அறியாவிட்டாலும் – பெரியவர்கள் என்றும் மறந்து விடமாட்டார்கள்.

45 ஆண்டுகள் க்டந்து விட்டாலும் அது பற்றி இன்றும் வினவும் போது – யாழ் கத்தோலிக்க சமூகம் மட்டுமல்ல யாழ். குடாநாடே சோகத்தில் அதிர்ந்து உறைந்து போன அந்த சம்பவத்தை – பெரியவர்கள் தமது கடலோடு கலந்து போன வாழ்வில் என்றும் மறக்க முடியாத சோக வரலாறாகவே மனதுகளில் பதிந்து வைத்திருக்கின்றார்கள் என்பது தெளிவாகப் புரிகிறது.

குருநகரைச் சேர்ந்த கி.கிறிஸ்தோப்பர் என்பவரிடம் இச்சம்பவம் பற்றி இந்தச் சித்திரிப்பு எழுத்துக்காக கேட்ட போது உடனேயே குரல் இறுக ஐயோ அது பற்றிச் சொல்லவே இன்னும் உடம்பு நடுங்குது. இச்சம்பவம் ஏன் எப்படி அப்போது நடந்தது என்பது இன்னுமே தெரியாது. வெல்லம் குடும்பத்தவர்களின் படகு கவிழ்ந்து 72 பேர் கடலில் மூழ்கி இறந்ததோடு வெல்லத்தின் மகனும் இறந்து போன போது குருநகரே அதிர்ந்து சோகத்தில் ஆழ்ந்து போனது. கடற்தொழில் செய்கின்ற எல்லா மக்களிடையேயும் அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தாலும் ஓர் அன்புறவும் புரிந்துணர்வும் உண்டு. இந்த சோக நிகழ்வு 1970ஆம் ஆண்டு நடைபெற்ற போது குருநகர் மக்கள் மட்டுமல்ல கடற்தொழில் செய்யும் அனைத்து பகுதி மக்களுமே வேதனை அடைந்தார்கள் என்றார்.

1970 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி யாத்திரிகர்கள் பாலதீவு நோக்கிப் பயணமானார்கள். குருநகர் கடற்கரையோரத்தில் இருந்து வள்ளங்கள் திருநாள் ஆரம்பமான நாளில் இருந்தே புறப்பட்டன. பாலதீவு மக்கள் அனைவரும் தமது இருப்பிடங்களை விட்டு இங்கு செல்வது வழக்கம் என்றாலும் குருநகர் மக்கள் மட்டுமல்ல இலங்கையின் வடபாகத்திலிருந்து பல மக்கள் குறிப்பாக கடற்தொழில் செய்யும் மக்கள் புறப்பட்டார்கள்.

நிகழப் போகும் பயங்கரம் பற்றி அவர்களுக்கு எப்படித் தெரியும். அன்ரனிப்பிள்ளை கிறகா வெல்லம் என்பவரது வள்ளம் கவிழ்ந்து அதில் பயணித்த 72 பேரும் இறந்து போனார்கள். வெல்லம் என்பவரது மகன் டியுக் என்பவரும் இறந்தார்.

மேற்படி இடரில் வெளி இடங்களைச் சேரந்தவாகளே அதிகமாக இறந்து போனார்கள். அந்த ஆழ் கடலில் இறந்து போனவர்களின் உடல்கள் மறுநாளே கயித்தான் என்பவரால் சுழியோடி எடுக்கப் பட்டன.

பாலதீவு புனித அந்தோனியார் திருவிழா யாழ் – மன்னார் மறைமாவட்ட கரையோர கத்தோலிக்க மக்களை இணைத்து இறை அனுபவம் பெறும் ஒரு பெருவிழா ஆகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு மக்கள் சுகநலம் பேண பாரபட்சமற்ற சேவை தேவை

வடக்கு மாகாணத்தில் மொத்தம் நூற்றொரு மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் முப்பத்தொன்றில் (பொறுப்பான) மருத்துவர்கள் எவரும் பணிக்கு அமர்த்தப் படவில்லை. வடக்கில் உள்ள மருத்துவமனை களில் அண்ணளவாக முப்பத்திமூன்று சதவீதமா னவற்றுக்குப் பொறுப்பான மருத்துவர்கள் நிய மிக்கப்படவில்லை. மிகப் பலர் மீள் அடிப்படையிலேயே பணியாற்றுகிறார்கள் --

அது மட்டுமன்றி, வடக்கில் உள்ள மருத்துவமனைகளில் சிற்றூழியர் தொடக்கம் ஏனைய பணியாளர்களுக்கும் பெரும் தட்டுப்பாடு உண்டு --

மேற்குறிப்பிடப்பட்ட விவரங்களை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் மிகுந்த கவலையுடன் வெளிப்படுத்தி உள்ளார்.

அந்தந்த மாவட்டத்துக்கு உரிய பொதுவைத்தியசாலைகளை (பெரியாஸ்பத்திரிகளை) விட அங்கு இயங்கும் ஏனைய மருத்துவமனைகளுக்கே, பெரும்பாலான நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்குச் செல்வதுண்டு.

அவ்வாறிருக்க, ஆங்காங்கு இயங்கும் அரச வைத்தியசாலைகளில் மருத்துவர்கள் உட்பட வகைசார் பணியாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவது தமிழ் மக்களின் சுகவாழ்வில் அரசுக்கு அக்கறை இல்லை என்ற நிலைமையையே, தன்மையையே வெளிப்படுத்துகிறது.

ஏனைய மாகாணங்களை விடவும் வடக்கிலேயே இந்த நிலை பூதாகரமாக உள்ளது என்பது கொழும்பு அரசுக்குத் -- ஆட்சியாளர்களுக்குத் - தெரியாது இருப்பதற்கு வாய்ப்பில்லை.

மாகாண சபை இங்கு இயங்கத் தொடங்குவதற்கு முன்னரே, வடமாகாண மக்களுக்கான வைத்திய சேவையில் கொழும்பு அரசு பாரபட்சம் காட்டிவந்தது. ஏனைய மாவட்டங்களுக்கு அள்ளிக்கொடுத்தும், வடக்குக்குக் கிள்ளித் தெளிக்கும் போக்கே - பாரபட்சமே - மேலெழுந்து நின்றது.

இந்த ஆண்டு ஜனவரியில் பதவிக்கு வந்த மைத்திரிபால அரசும், அந்த வழித்தடத்திலேயே பயணிக்க முனையக்கூடாது. தென்னிலங்கை வாழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, நூறுநாள் வேலைத்திட்டத்தில் முன்னெடுக்கும் பிரதான செயற்றிட்டங்களை வடக்கிலும் சமகாலத்தில் - சமாந்தரமாகச் செயல்முறையாக்கும் பொறுப்பு புதிய அரசுக்கு உண்டு.

மருத்துவத்துறையில் மட்டுமன்றி, ஏனைய அத்தியாவசியத் துறைகளிலும் வடக்கு வாழ் மக்களின் நலன்களில் புதிய அரசு அதிக கவனம் செலுத்தியாக வேண்டும். அவர்கள் அள்ளி வழங்கிய வாக்குகளே, இப்போதைய நிலைக்குத் தங்களைத் திடீரென உயர்த்தியது என்பதனைப் புதிய கூட்டரசு மறந்துவிடலாகாது.

தனது நூறுநாள் திட்டத்தில், வடக்கின் அவசிய, அவசர தேவைகளை முன்னிறுத்திச் செயற்பட வேண்டும். அவற்றில் இங்கு வாழும் மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான செயல்முறைமைகளை முன்னிறுத்துவதற்கு வகைசெய்வது தவிர்க்க முடியாத ஒன்றெனக் கருதிச் செயற்பட வேண்டும். நூறு நாள்களில், இன்னமும் இன்றோடு 48 நாள்களே உள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான புதிய நடைமுறை குறித்து மிகுந்த கவனம் செலுத்தும் அரசு, மக்கள்நலன் நாடிய செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். அதனை ஒன்பதோடு ஒன்றாக வசதிப்படி மறந்து விடலாகாது.

மக்களின் சுகநலனை முதன்மைப்படுத்தி, அதற்கான புதிய நடைமுறைகள் நூறுநாள் திட்டத்தில் இணைக்கப்பட வேண்டும்.

அடுத்த தேர்தல் வரை - புதிய அரசு உருவாகும் வரை - அதனை நீட்டிச் செல்லலாகாது. மக்கள் சுகநலன் பேணப்படுவதில் அதிக கரிசனையும், கவனமும் செலுத்தப்பட வேண்டும். வாக்காளர்கள் - மக்கள் - சுகநலம் பாதிப்புற்றால் அரசியல் வெற்றியும் நலினமுறும் என்பதனை ஆட்சியாளர்களும் அரசியலாளர்களும் பகுத்து உணர்வார்களா..........?

# 100 இல் சரிபாதி ஓடிக்கழிந்து விட்டதே வெற்றிக் கனியைப் பறிக்க முடியுமா?

சிங்கள மூலம் லங்காதீப
தமிழில் விஎஸ்ரி

## பொருத்தமானவர்களிடம் சாவிக்கொத்து கையளிக்கப்பட்டதா?

சாவியைப் பொருத்தமானவரது கையில்தான் கையளிக்க வேண்டும். அதே போன்று பொருத்தமான ஒருவரே சாவியைக் கையேற்கவேண்டும். இல்லையேல் சிக்கலுக்கு மேல் சிக்கல் தான்.

நாட்டின் அரசியல்சாவி கைமாறியுள்ளது. ஆதலால் சாவிக்கொத்தைத் தம் வசம் வைத்திருந்தோர் தற்போது வேறு தரப்பினரிடம் அதனைக் கையளித்துள்ளனர்.

ஆதலால் சாவிக்கொத்தை கையேற்றுள்ள தரப்பினர் உள்ளே பிரவேசித்து ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து கவனம் செலுத்தியாக வேண்டும்.

நாட்டின் பெரும்பாலான பொதுமக்களது விருப்பின் பேரில் புதிய அரசொன்று உருவாகியுள்ளது. புதிய ஜனாதிபதி பதவி ஏற்றுள்ளார். அவரால் புதிய பிரதமரும், அமைச்சரவை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டு பதவி ஏற்றுள்ளனர். இவர்கள் மூன்றுமாதங்கள் முடிவில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதால் இந்தச் சிறிய கால இடைவெளிக்குள் பொறுப்புக்கள் சிலவற்றை நிறைவேற்றியாக வேண்டியுள்ளது. இந்தக் குறுகிய காலஇடைவெளிக்குள் புதிய அரசு 100 நாள்கள் வேலைத்திட்டமொன்றை முன்வைத்திருப்பதே அதற்குக் காரணம். இந்த வேலைத்திட்டம் குறித்து முழு நாடுமே விழிப்பாக அவதானித்த வண்ணம் உள்ளது. இந்தத் திட்டத்தை உரிய முறையில் செயற்படுத்தத் தவறினால் புதிய அரசைக் குறைகூறி விமர்சிக்கவும் ஒரு தரப்பினர் காத்துக்கொண்டிருக்கின்றனர். இந்த 100 நாள்களில் பாதி நாள்களுக்குமேல் தற்போது முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள குறுகிய கால இடைவெளிக்குள் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டின் அரசு துறைகள் பலவற்றின் செயற்பாடுகள் கடந்த காலத்தில் நலிவு நிலை கண்டிருந்தன. அரச நிறுவனங்கள் ஆற்றவேண்டியிருந்த செயற்பாடுகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதனால் இலாபம் ஈட்ட வேண்டியிருந்த பல அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்க நேர்ந்தது. சில அரச நிறுவனங்களை இயங்க வைப்பது அரசுக்குப் பெரும் சுமையாக அமைந்திருந்தது. இதனால் சில அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. வேறுசில அரச நிறுவனங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டன. இவ்விதம் என்னதான் மாற்றங்களை மேற்கொண்டாலும் அத்தகைய நடவடிக்கைகள் நாட்டின் எதிர்கால சுபீட்சம் குறித்து சிந்தித்து புத்திசாலித்தனமாகவும் தூரநோக்குடனும் முன்னெடுக்க வேண்டிய வேளைஉருவாகியுள்ளது.அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்காக இன,மத பேதங்களைப் புறமொதுக்கிச் செயற்படுவது பெறுமதிமிக்கதாக அமையும்.

இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏறக்குறைய நான்கு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவ [illegible] ஆயினும் குறிப்பிடத்தக்க பெருந்தொகை யான பொதுமக்கள் அவரது ஆதரவாளர்களாக இருக்கின்றனர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

### புதிய நியமனங்கள் சரியாக நடந்ததா?

எது எவ்வாறானபோதிலும் புதிய ஜனாதிபதி பதவி ஏற்றுக்கொண்டகையுடனேயே புதிய பிரதமர் ஒருவரையும் புதிய அமைச்சரவை ஒன்றையும் நியமித்திருந்தார். அதன் பின்னர் பல அரச நிறு வனங்களில் தலைமைப் பதவிகளை வகித்த பலர் அவர்களது பதவிகளிலிருந்து அகற்றப்பட்டு அந்தப் பதவிகளுக்குப் புதியவர்கள் நியமிக்கப்பட்டதைக் காணமுடிந்தது. நூறுநாள்கள் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படஆரம்பித்தவேளையில்அவ்விதம்அரச நிறுவனங்கள் பலவற்றின் தலைவர்கள் அவர்களது பதவிகளிலிருந்து அகற்றப்பட்டமை சிறப்பான செயற்பாடொன்றாகக் கருத இயலவில்லை. அத்தகைய முன்னாள் அரச நிறுவனங்களது உயர்அதிகாரிகளின் செயற்பாடுகள் தவறானதாக இருந்திருக்கக்கூடும். ஆனால் அத்தகையோர்ரை அவர்கள் வகித்து வந்த பதவிகளிலிருந்து தரமிறக்கி அல்லது அதே பதவிகளை அவர்கள் தொடர்ந்து வகிக்க இடமளித்து பொறுப்புக் கூறத்தக்க விதத்திலான வேறு சிலரை அந்த நிறுவனங்களில் நியமித்து குறித்த அரச நிறுவ னங்களது செயற்பாடுகளை வினைத் திறன் மிக்கதாக ஆக்க வாய்ப்பிருந்தது. குறித்த உயர் அதிகாரிகளின் செயற்பாடுகளால் ஏற்பட்ட விரயங்கள், ஊழல்கள் என்பவற்றை அந்தந்த நிறுவன மட்டங்களில் வைத்தே நேர்சீர் செய்வித்துக் கொள்ள வாய்ப்பிருந்தது.

குறிப்பிட்ட அந்த நிறுவனங்களது தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பொறுப்புக்கள் குறித்து ஆய்ந்தறிந்து அவற்றைச் செயற்படுத்தஇந்த நூறு நாள்கள் அவகாசம் போதுமானதாக இல்லை. குறிப்பிட்ட அந்த அரச நிறுவனங்களது செயற்பாட்டு ஒழுங்குகள் குறித்து அனுபவபூர்வமாக அறிந்து கொள்ளவோ, ஆவணங்களைப் பரிசீலித்து உரிய கட்டளைகளை மேற்கொண்டு நிறுவனத்தை செயலூக்கம் மிக்கதொன்றாக நிர்வகிக்க கால அவகா சம் போதாதிருப்பது, நூறுநாள்கள் வேலைத்திட்டம் தாமத மும் அடைவதற்கான அடிப்படைக் காரணமாகும்.

### ஜனாதிபதி விரும்பினால்...........

குறித்த நிறுவனங்களில் முன்னர் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்த அந்த பழைய அதிகாரிகளை அதேநிறுவனத்தில் கடமையாற்ற அனுமதித்திருந்தால், அவர்கள் ஏற்கனவே அத்தகைய நிறுவனங்களை நிர்வகித்த அனுபவம் கொண்டிருப்பதால் நூறுநாள்கள் வேலைத்திட்டத்தை சகல அரச நிறுவனங்களிலும் முறைப்படி முன்னெடுக்க வாய்ப்பிருந்தது. இப் போதும் கூட ஜனாதிபதிவிரும்பி னால் புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் அரச நிறுவனங்களிலி ருந்து வெளியேற்றப்பட்ட முன் னைய தலைவர்கள் மற்றும் நிறை வேற்று அதிகாரிகள்திருப்திகரமான உடல், உள ஆரோக்கியத்துடன் இருப்பார்களானால், அவர்களை மீண்டும் அந்தந்த நிறுவனங்களில் இணைத்துக்கொண்டு, குறித்த நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களின் கீழ், ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கண்காணிப் பின் கீழ் குறித்த நிறுவனங்களைச் செயலூக்கம் மிக்க வகையில் செயற்பட வைக்க இயலும். இதற்கு ஒருவார கால அவகாசம் போதுமானது. இதன்மூலம் நல்லாட்சிக் கான அடித்தளத்தை இட இயலும்.

கடந்த காலங்களில் இலங்கை பலதரப்பட்ட வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர் தரப்புக்களின் கீழ் செயற்பட நேர்ந்தது. ஆனால் எதிர்காலத்தில் நாடு அத்தகையதொரு நிலைக்கு முகம்கொடுக்கவேண்டிய அவசியம் கிடையாது. இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளிடம் உதவி ஒத்தாசைகள் பெற்றுக் கொள்வது தவறல்ல. ஆனால் அத்தகைய நாடுகள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட முயலுமாயின் அதற்கு எவரும் தலை தாழ்த்த வேண்டியதில்லை. அனுமதிக்க வேண்டியதில்லை.

நாம் மேலே குறிப்பிட்டவாறு இன்று அரச நிறுவனங்களில் உயர் பதவிகளை வகிக்கும் அதிகாரிகள் குறித்த நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து பூரண அறிவு கொண்டிராததால் செயற்றிறன் அற்றவர்களாக இருக்க நேர்ந்துள்ளது. அத்தகையோர் ஜனாதிபதியின் 100 நாள்கள் வேலைத்திட்டம் தொடர்பாகத் தாம் ஆற்றவேண்டிய பணி குறித்து ஆராய்வதில் காலத்தைப் போக்கி வருகின்றனர்.பொதுவாக நோக்கும்போது இது நடைமுறைச் சிக்கலாக ஆகியுள்ளது.

ஆதலால் அரசியல் பழிவாங்கல்களை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு, குறித்த நிறுவனப் பதவிகளிலிருந்து ஒதுக்கி வைத்தவர்களை மீண்டும் அந்தந்தப் பதவிகளில் இருத்தி, அவர்கள் மூலம் இந்த நூறுநாள் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து நிறைவேற்றுவது பெறுமதிமிக்கது. அவசியம் ஏற்படின் அத்தகையோரை வழிநடத்த, அவர்களது செயற்பாடுகளைக் கண்காணிக்க புதிய அரசின் நம்பிக்கையான தரப்பினரை நியமிக்க இயலும். அதே வேளை ஊழல் மோசடிகள் மேற்கொண்டோராகக் கருதப்படும் நபர்கள் குறித்து விசாரணைகளையும் முன்னெடுக்க இயலும்.

நாம் இந்தக் கருத்தை முன்வைப்பதற்கான காரணம், நாட்டின் முன்னேற்றம் குறித்த எதிர்பார்ப்பிலேயே. நாடு பின்னடைவுக்கு உட்படுமானால் அது ஒருவரையோ இருவரையோ அல்லாது முழு நாட்டையுமே பாதிப்பதாக அமையும்.

(கொழும்பு ஹுனுப்பிட்டி கங்காராமவிகாராதிபதி கல்கொட ஞானிஸ்சர தேரரின் கருத்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 208


# கோதுமை மாவா? அரிசி மாவா?

கோதுமை மாவா? அரிசி மாவா? எது மிகவும் சுவையானது? இவற்றுள் எது உங்களுக்கு மிகவும் பொருத்தமானது? நாம் ஒவ்வொருவரும் ஆரோக்கியமாகவே வாழ ஆசைப்படுகின்றோம். பாடசாலைக்குச் செல்லும் குழந்தை முதல், கடலுக்குச் செல்லும் மீனவர், வயலுக்குச் செல்லும் விவசாயி, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை புரிவோர் மற்றும் கூலி வேலைகளுக்குச் செல்வோர், ஏன் இன்னும் வீட்டில் வேலையின்றி வெட்டியாக இருப்போர் என அனைவரினதும் காலை, மாலை மற்றும் இடைவேளை சாப்பாட்டு வேளைகளிலும் வாய்க்கு விருந்து அளிப்பது பாணும், பாண் சார்ந்த உணவுப் பொருள்களாகவும் காணப்படுகின்றமை கண்கூடு. சமையல் நேரத்தைச் சிக்கனப்படுத்தவோ அல்லது வேலையை இலகுவாக்கவோ பாண் அல்லது பாண் சார்ந்த பொருள்கள் இன்றைய பலருடைய தெரிவாக இருக்கின்றமையை எவராலும் மறுக்க முடியாது.

நாம் உண்ணும் வெள்ளைப்பாண் (white bread) வெறுமனே தீட்டப்பட்ட கோதுமை மாவினால் (Refined wheat flour) தயாரிக்கப்பட்டதாகும். அந்தத் தீட்டப்பட்ட கோதுமை மா எவ்வாறு இருக்கும் எனப் பார்ப்போமானால், முதலில் கோதுமை மணியின் கட்டமைப்பைச் சற்று நோக்கினால் அதனை இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

கோதுமை மணியானது 03 பிரதான பகுதிகளைக் கொண்டது.

தவிடு – வெளிப்புறமாகக் காணப்படும் மேற்பூச்சு, இது நார்ப் பொருளும் போசனையும் செறிந்தது.




முளையம் – இதிலிருந்தே கோதுமைப் பயிர் முளைக்கின்றது. புதிய பயிரைத் தோற்றுவிப்பதற்குத் தேவையானவிற்றமின்களும் கனியுப்புக்களும் செறிந்தது.

வித்தக விளையம் – மாப்பொருளும், புரதமும் கொண்ட பகுதி இங்கு நாம் சாதாரணமாக ரொட்டி, பிட்டு, பாண் போன்றவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் கோதுமை மாவை நோக்குவோமானால், கோதுமை மணி பதனிடப்பட்டு அரைக்கப்படும் போது அதனது தவிட்டு பகுதியும், முளையப்பகுதியும் அகற் றப்பட்டு, வெறுமனே மாப்பொருளை செறிவாகவும் சிறிதளவு புரதத்தையும் கொண்ட வித்தக விளையம் மாத்திரமே மாவாக அரைக்கப்படுகின்றது. இதனால், துரதிர்ஷ்டவசமாகக் கோதுமை மாவிலிருந்து முழுமையாகக் கிடைக்க வேண்டிய முளையமும் நார்ப்பகுதியும் இழக்கப்படுகின்றது. அவ்வாறே எமக்குக் கிடைக்க வேண்டிய நார்ப்பொருளும், விற்றமின்களும், கனியுப்புக்களும் பெரும்பாலும் கிடைக்காமற் போகின்றன.


ஆனால், முழுமையாக தீட்டப்படாத சிவப்பு அரிசியிலிருந்து உற்பத்தியாக்கப்படும் அரிசி மாவை நோக்குவோமாயின், அது நார்ச்சத்து, கனியுப்பு, உயிர்ச்சத்து– B போன்றவற்றைச் செறிவாகக் கொண்டிருக்கும். ஏனெனில் தீட்டப்படாத சிவப்பு அரிசியிலிருந்து முளையமும், தவிட்டுப் பகுதியும் அகற்றப்படாது சேர்த்து அரைக்கப்பட்டு மா ஆக்கப்படுகின்றது.

அதிலிருக்கும் நார்ச்சத்தானது நீரை உறிஞ்சி வயிற்றை நிறைக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றது. நீங்களும் தீட்டப்படாத அரிசி அல்லது தவிடு சேர்க்கப்பட்ட சிறிய அளவு உணவுகளை உண்ணுகையிலேயே வயிறு நிறைந்த உணர்வை அளிக்கின்றது.

குறிப்பு: அரிசி மாவை விடவும் முழுமையான தானியங்கள் ஆன (whole Grain) சோளம், அவுரை, குரக்கன், உழுந்து, எள், பாசிப்பயறு, கௌபி, கொண்டைக் கடலை, கச்சான், மைசூர் பருப்பு என்பன சிறிய அளவு எடுக்கும் போதே வயிறு நிரம்பிய உணர்வை அளிக்கவல்லவை.

விசேடவிதமாக நீரிழிவு நோயாளர்களைப் பொறுத்த வரையில் அரிசி மாவை விடவும் முழுமையான தானியங்களாலான (whole grain) அல்லது அவற்றின் மூலமான உற்பத்திப் பொருள்களும் சாலச் சிறந்தவையாகும். ஏனெனில் முழுமையான தானியங்களைக் காட்டிலும் அரிசி மா, கோதுமை மாவால் ஆன உணவுகளை உண்ணும்போது ஏற்படும் குருதிக் குளுக்கோசு மட்டத்தின் அதிகரிப்பு சற்று உயர்வாகக் காணப்படுகின்றது. தீட்டப்பட்ட கோதுமை மா (refined wheat flour) சார்ந்த உணவுப் பொருள்களை உண்ணும்போது உடல் எடை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படுவது மட்டு மல்லாது, உடற்கலங்களுக்கு இன்சுலின் கடத்தப்படுவதற்குத் தடையை ஏற்படுத்தும் மறைமுகக் காரணியாகவும் அமைந்து விடுகின்றது.

J.R.Shanker Lambert
Nutritionist
(போசனையியலாளர்)



# அமீபாவினால் ஏற்படும் ஈரல் சீழ்க்கட்டிகள்

## (Amoebic liver abscess)

ஒவ்வொரு வாரமும் இரண்டு மூன்று பேராவது ஈரல் சீழ்க் கட்டிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றார்கள். இந்த நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் வேதனையை அளிப்பதுடன் சிலவேளைகளில் மரணத்தையும் ஏற்படுத்தக் கூடியது. தடுக்கப்படக்கூடிய இந்த நோய் வடபகுதி மக்களிடையே பரவியிருக்கக் காரணம், இந்த நோய் பற்றிய விழிப்புணர்வு இன்மையும் அறியாமையுமாகும்.

பெரும்பாலான ஈரல் சீழ்க்கட்டிகள் என்ரமீபா ஹிஸ்ரோலிடிகா (Entamoåba histolitica) எனப்படும் ஒருகல நுண்ணங்கிகளால் ஏற்படுகின்றன. இனி இந்த நுண்ணங்கிகள் எவ்வாறு மனிதனின் ஈரலைச் சென்றடைகின்றன எனப் பார்ப்போம். அமீபாவின் முட்டைகள் (Cysts) நோய் வாய்ப்பட்ட அல்லது காவியாகவுள்ள ஒருவரின் மலத்துடன் வெளியேறுகின்றன. இவை சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் அசுத்தமான நீருடன் சேர்ந்து எமது உணவுக் கால்வாயை அடைகின்றன. இங்கு முட்டை முதிர்வடைந்து Trophozoit எனப்படும் நிறையுடலியாகிறது. சிலவேளைகளில் பெருங்குடலில் அமீபாக்கள் அழற்சியை ஏற்படுத்துகின்றன. இதனால் நோய் வாய்ப்பட்டவர் இரத்தம், சீதம் என்பவற்றுடனான வயிற்றுப் போக்கை அடைவார். ஆனால் பலரில் வயிற்றோட்டம் ஏற்படாமல் அமீபாக்கள் குடல் நாளங்களினூடாக ஈரலை அடைந்து ஈரலில் சீழ்க் கட்டிகளை ஏற்படுத்துகின்றன.

இனி ஈரல் சீழ்க்கட்டிகளால் ஏற்படும் அறிகுறிகளைப் பார்ப்போம். மாறாத காய்ச்சல், வயிற்றின் வலப்புற மேற்பகுதியில் நோ, வலது தோளில் நோ, குளிருடன் கூடிய நடுக்கம் என்பன பொதுவான அறிகுறிகளாகும். சிலருக்கு வயிற்றோட்டமும் இருக்கலாம்.

மக்களின் சுகாதாரப் பழக்கங்கள் தற்போது மேம்பட்டு வருவதால் உணவினாலும் நீரினாலும் ஏற்படும் அமீபாத் தொற்று இப்போது மிகவும் அரிதாக உள்ளது. நீரைக் கொதிக்க வைத்தல், மலக்கழிவுகளைத் தகுந்த முறையில் அகற்றுதல், உணவை, இலையான்கள் மொய்க்கவிடாது பாதுகாத்தல், உணவுண்ணும் முன்னரும், மலசல கூடங்களைப் பயன்படுத்திய பின்னரும் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுதல் போன்ற நற்பழக்கங்கள் மூலம் ஏனைய வயிற்றோட்ட நோய்களைப் போல் அமீபாவினால் ஏற்படும் நோய்களும் சாதாரண மக்களிடையே குறைவடைந்து விட்டன.

அவ்வாறாயின் யார் இந்த ஈரல் சீழ்க்கட்டிகளுக்கு ஆளாகுகிறார்கள்? அவர்கள் வேறுயாருமல்ல பன்ன, தென்னை என்பவற்றிலிருந்து பெறப்படும் கள்ளை அருந்தும் மதுப்பிரியர்களே அவர்கள்.

இந்த அமீபாக்கள் எவ்வாறு கள்ளை அடைகின்றன என்பது இன்னமும் சரியாக அறியப்படவில்லை. தயாரிப்பு மற்றும் சேகரித்து வைக்கும் போது தகுந்த சுகாதார முறைகளைப் பயன்படுத்தாமையே அமீபாத் தொற்று ஏற்படக் காரணமாக இருக்கலாம்.

**அமீபாவினால் ஏற்படும் ஈரல் சீழ்க் கட்டிகள் ஒரு பாரதூரமான உயிராபத்தை ஏற்படுத்த கூடிய நோயாகும். கள் அருந்துபவர்களிடமே இந்த நோய் அதிகமாகக் காணப்படுகின்றது.**

இனி ஈரல் சீழ்க் கட்டிகளால் ஏற்படும் விளைவுகளைப் பார்ப்போம். இது ஒரு அபாயகரமான நோய். தகுந்த சிகிச்சையில்லாவிட்டால் உயிரிழப்பையும் ஏற்படுத்தலாம். பெரிய சீழ்க்கட்டிகள் அருகிலுள்ள உறுப்புகளுக்குள் உடைந்து பாதிப்பை ஏற்படுத்தலாம். உதாரணமாக நுரையீரலிற்குள், இதயத்தைச் சூழவுள்ள மென்சவ்வினுள் மற்றும் வயிற்றுக்குள் உடைந்து தொற்று அவ்விடங்களில் பரவலாம். இதைவிட மூளையிலும் சீழ்க் கட்டிகள் ஏற்படலாம்.

ஈரல் சீழ்க்கட்டிகளுக்கு எவ்வாறான சிகிச்சை முறைகள் உள்ளன? இதற்கு மெற்றனைடசோல் (metronidazole) என்ற மருந்து வாய் மூலமாகவோ ஊசி மூலமாகவோ நோயாளிக்கு வழங்கப்படுகின்றது. பெரிய கட்டிகள் மற்றும் உடையக் கூடிய கட்டிகள் ஸ்கான் உதவியுடன் ஊசியால் குற்றி உறிஞ்சப்படுகின்றன. சிலவேளைகளில் சத்திரசிகிச்சையும் செய்ய வேண்டி ஏற்படலாம்.

ஈரல் சீழ்க்கட்டிகள் எமது பிரதேசத்தில் ஒரு பாரதூரமான பிரச்சினையாக உள்ளது. எனினும் மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் என்பன அரிதாகவுள்ளன. மது அருந்துபவர்கள் எல்லோரிடமும் ஈரல் சீழ்க்கட்டிகள் ஏற்படுவதில்லை. கள் அருந்துபவர்களில் தான் இந்நோய் ஏற்படுகின்றது. வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள அன்றாடம் உழைத்து வாழும் ஆண்களே இந்த நோய்க்கு ஆளாகின்றார்கள். மது அருந்துவது தவிர்க்கப்பட வேண்டிய தீய பழக்கமாகும். கள் அருந்துவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டிய பழக்கமாகும். பல வருடங்களுக்கு முன்னர் கள் அருந்தி பின்னர் அதனை நிறுத்திக் கொண்டவர்களும் ஈரல் சீழ்க்கட்டிகளுடன் வருவதை நாம் கண்டுள்ளோம். ஆனால் ஆயிரக்கணக்கான சீவல் தொழிலாளிகளின் ஜீவனோபாயம் இந்த கள் உற்பத்தியில் தங்கியுள்ளதையும் நாம் மறக்க முடியாது. மது அருந்துவதை முற்றாக ஒழித்துக்கட்டுவதும் நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும். மதுப் பழக்கம் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வரும் பழக்கமாகும்.

எனவே நாம் கள் தயாரிப்பில் சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சுகாதார பரிசோதகர்கள் கள்ளுத் தவறணைகளைக் கண்காணிக்க வேண்டும். அது மட்டுமில்லாது கள் தயாரிப்பில் எவ்வாறு அமீபாத் தொற்று ஏற்படுகின்றது என்பது பற்றி ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும்.

மருத்துவர் எஸ். கேதீஸ்வரன்,
பொது வைத்திய நிபுணர்
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



# விற்பனைக்கு



### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் , k.k.s வீதி, தெல்லிப்பழையில் 8ஆம் கட்டையிலிருந்து அளவெட்டி செல்லும் வீதியில் 400 யார் தூரத்தில் வற்றாத கிணற்றுடன் தெற்கு எல்லை வீதியாக அமைந்த 45பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் வேறு பாவனைகளுக்கும் ஏற்றது.

பேச்சுக்கள் நேரடியாக மட்டும்.

தொடர்பு: 077 881 3700
158/8 கோயில் வீதி,
கோயில் வடக்கு வீதி,
நல்லூர். (57507)(8.3.7)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய், ஆனந்தா வீதியில் நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 689 1809 (57399)(4.3.7)

### பாவித்த தளபாடங்கள் விற்பனைக்கு

- செற்றிசெற்
- குளிர்சாதனப்பெட்டி (SISIL)
- காஸ்குக்கர் சிலிண்டர்
- T.V 21" Sony
- இரும்பு அலுமாரி, கட்டில், சோக் கேஸ்

T.P. No: 077 423 8829 (57493)(4.3.7)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

TX-xxxx இலக்கமுடைய Hero Honda CBZ XTREME,150CC விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 440 0610

### வீடு விற்பனைக்கு

சுன்னாகம் மாணிக்கதியாகராஜா வீதி, செல்ல வளவில் 2 பரப்பு 7.90 குழி கொண்ட காணியுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077614 6434 (57524)(3.7.8)

### காணி விற்பனைக்கு

வடமராட்சி, உடுப்பிட்டி, இரத்தினம் கடை ஒழுங்கையில் மாப்பத்தை என்ற நிலப் பரப்பு 15 விஸ்தீரணமான பனங்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 6828345
077 230 5084

(57585)(8.3.7)

### காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு, வற்றாப்பளையில் பிரதான வீதிக்கருகில் அமைந்துள்ள 25 ஏக்கர் தென்னந் தோட்ட உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு. இளந் தென்னங்கன்றுகளுடன் வீடு, கிணறு, மின்சார வசதிகளுடன் உண்டு.

மேலும் தொடர்பு: 077 196 3836,
026 222 0473

(சி/19807)(8.3.7)

### விற்பனைக்கு

புதிய தைத்த பெரிய கேட்டின்கள் (ஜன்னல் கதவுச்சீலைகள்) அலுமினிய பிற்றிங்ஸ்,கண்ணாடிக் கதவுகள் என் பன விற்பனைக்குள்ளன.

தொடர்பு: 072 9311 927 (57552)(8.3.7)

### விற்பனைக்கு

காங்கேசன் துறை வீதி, மல்லாகத்தில் அமைந்துள்ள மரம் அரியும் தொழிற்சாலை கொட்டகையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 193 6409

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒரு கைப் பாவனையில் உள்ள Scooty pept மோட்டார் சைக்கிள் விற்பனைக் குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 978 9752

### காணிகள் விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதேச சபை பிரிவில் அமைந்துள்ள புலோலி, கிராமக்கோடு- பல்லைப்பை வீதியில் 4 பரப்புக் காணியும், புற்றளை விளையாட்டு மைதானத் துக்கு அருகில் வீட்டுடன் 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு : 077 113 4950 / 071 241 3113

### விற்பனையாளர் தேவை

சுன்னாகம் நகரில் இயங்கும் பிரபல்ய பல் பொருள் மொத்த, சில்லறை விற்பனை நிலையத்துக்கு விற்பனையாளர்கள் (பொதி செய்பவர்கள்)தேவை.

தொடர்புகளுக்கு - லக்சுமி ரேட் சென்ரர்,
இல. 31, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
021 224 2080 / 077 668 1670

### TV கள் மலிவு விற்பனை

SONY Wega Flat 14"-5000/=, 21"-10000/=, 25" - 14000/=, SONY DVD-3000/=, ரேடியோ கசெற்-3000/=, BOX, குளிர்சாதனப்பெட்டி- 20000/=

**சோனி ரேற்ட் சென்ரர்**
(கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். T.P: 077 044 0570

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, இல. 625/5 இல் அமைந்துள்ள பழைய வீட்டுடனான ஒரு பரப்பு 16.23 குளி நிலம் விற்பனைக்கு.

தொடர்பு :
ரவி - 077 727 0310
வசந்தன் - 077 281 2796

### விற்பனைக்கு

நாய்க் கூடு, குருவிக் கூடு Table (புதியது) மிக மலிவு நிலையில்.

T.P : 077 755 6244

### ஊர் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

ஒரு மாத/இரண்டு மாத விறாத்துக் குஞ்சுகளும், கிறிராஷ் ஒரு நாள் குஞ்சுகள் 70/= விற்பனைக்கு திருநெல்வேலியில் உண்டு. தொடர்பு : 077 755 6244

# வாடகைக்கு

### வாடகைக்கு

கிளிநொச்சி நகருக்கு அருகில் நாள்,கிழமை, மாத வாடகைக்கு அறைகள் உண்டு.

தொடர்பு: 077 8355 900 (562)(8.3.7)

### வீடு வாடகைக்குண்டு

டேவிற் றோட்டில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. A/C மெசினும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 901 4803 (57457)(4.3.7)

### அறைகள் வாடகைக்கு

கல்விகற்கும் மாணவிகளுக்கு கொக்குவிலில் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 403 0493

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ,133/3, k.k.s றோட்டில் 3ஆம் 4ஆம் மாடி கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு

தொடர்பு: 077 967 3418
077 867 7970
(57557) (8.3.7)



# தேவை



### வேலையாள் தேவை

மானிப்பாய் H.N.B க்கு முன்பாக இயங்கிவரும் ஆர்த்தி மானிப்பாய் கிளைக்கு கணனிப்பதிவாளர் (Data Entry) பெண் வேலையாள் தேவை. அடிப் படைக் கணினி அறிவு போதுமானது நேரில் வரவும்

தொடர்பு: 076 67962243 (57576)(8.3.7)

### வீடு, காணி தேவை

நல்லூர், நல்லூரை அண்டிய பகுதிகளில் மூன்று/நான்கு அறைகளுடன் இரண்டு/ மூன்று பரப்புக் காணியுடன் வீடு தேவை. இடைத்தரகர்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தொடர்பு: சண்முகநாதன்
152/8, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 5565, 077 609 3384 (57571)(4.3.7)

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 4பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலை செய்வதற்குப் பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்பு : 077 3611 282

### வேலைவாய்ப்பு

V&LB நிறுவனத்தில் வேலைவாய்ப்பு. தரம் 10 முதல் O/L, A/L முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு :
077 902 1175
077 611 4228

### செங்கல் கட்டு வேலைக்கு ஆள்கள் தேவை(கிளிநொச்சி)

10" x 10" - 9' கட்டுவேலைக்கு 2300/=
நாள் கூலிக்கு மேசன் 1000/= - 1600/= வரை.
கூலி 800/= - 1100/= வரை.
வேலைக்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப் படும். வேலை பழக விரும்புவோர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 071 145 8583(57550)(8.3.7)

### மணமகள் தேவை

1980 ஆண் விசாகம், 4 ஆம் பாதம், கிரகபாவம் $22\frac{1}{2}$ யாழ். இந்து கௌரவ குடும்பம்.
சொந்தமான தொழில் வியாபாரம்.

தொடர்பு: 077 742 2604 (54293)(4.3.7)

# ஏனையவை

### விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை



★ பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)

★ முக சத்திர சிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்வதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- ★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ★ ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- ★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges,Implants)
- ★ வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
- ★ நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- ★ பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
459, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.Nகுமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச் சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.97/8, கல்லாகி அம்மன் கோயில் ஒழுங்கை,
கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம்.
(உரும்பிராய் சந்திக்கு அருகில்)
T.P: 072 681 6681, 072 681 6691 (56945)(4.3.6)

### கற்றுக் கொடுக்கப்படும்

யாழ்ப்பாணத்தில் தரம் 3, 4, 5 மாணவர்களுக்கு வீடுகளுக்கு வந்து சகல பாடங்களும் கற்பித் துக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 320 0884 (51372)(4.3.7)

### வரலட்சுமி

**பிளாஸ்ரிக் வார்ப்பு தொழிலகம்**

சகல மோட்டார் வாகனங்களுக்குமான பிளாஸ்ரிக் பொருள்கள் புதிதாகவும் வடிவமைத்தும் கொடுக்கப்படும். உடைவுகளும் ஒட்டிக் கொடுக்கப்படும். இரண்டு வருட உத்தரவாதமும் வழங்கப்படும்.

இல.286/2, அரசடி வீதி, நல்லூர். 077 351 2593

### வேலைவாய்ப்பு

ஆர்ப்பிக்கோ கம்பனியின் நிரந்தர, தற் காலிக வேலை வாய்ப்புக்கள், ETF, EPF உடன்.

தொடர்பு : 077 455 0599/ 024 567 2722

### வேலைவாய்ப்பு

தொழில் இல்லா பிரச்சினையா? புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சொக்லைட், டொபி, லஞ்சீட், கடதாசி தயாரிக்கும் நிறுவனத்துக்கு பொதி செய்தல் லேபல் பிரிவுக்கு ஆண்/பெண் உடன் தேவை. வயது 18- 40, சம்பளம் 36000/=

தொடர்புகளுக்கு
புதிய கண்டி வீதி, பிரகம.

தொடர்பு : 077 472 4137

### ஒத்துமாறல்

நீர்கொழும்பு வலய பாடசாலையிலிருந்து ஆரம்ப பிரிவு ஆசிரியர் வடமாகாண பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு : 077 403 0493 / 077 227 2616

### NORTH LEAD EDUCATIONAL CENTER

**யாழ். நகரில் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கு செல்வோருக்கான டொச் [Deutsch] மொழி வகுப்புகள்
Mr. R.மயூரன் ஆசிரியரால் கற்பிக்கப்படவுள்ளன.

மூன்றே மாதங்களில் மொழியை இலகுவாக, பேச, எழுத, வாசிக்க ஆரம்பத்தில் இருந்து அனுபவமான ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 021-222 4459, 0772533390, Fax: 222 4460

### பட்டட வேலைக்கு ஆள் தேவை

மாங்குளத்தில் A9 வீதிக்கு அருகில் கட்டட வேலைக்கு மேசன், தச்சு வேலைக்கு ஆள்கள் (நாள்கூலி/ஒப்பந்த அடிப்படையில்) தேவை.

தொடர்பு : 024 222 0352 / 077 025 7177

### பணியாளர்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு

- விற்பனையாளர்
- கணக்காளர்
- சிட்டைஎழுதுநர்
- கணினி அறிவுடையவர்
- மேற்பார்வையாளர் (ஆங்கிலம் தெரிந்தவர், அனுபவம் உள்ளவருக்கு நாளொன்றுக்கு 600/= ரூபாய் வழங்கப்படும்)

தொடர்பு : - 077 361 1282 (c 19812)(5.3.7)

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுடும்பம் 1986, ஆயிலியம் 07 செவ்வாய் கிரகபாவம் 46, M.Sc Engineer (Civil) ஆஸ்திரேலியாவில் Phd செய்யும் மணமகனுக்கு Doctor, Engineer அல்லது பல்கலைக்கழக பட்டதாரி மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு : 077 379 0471

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு—**
advt@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாட் அமைப்பால் தளபாடங்கள் அன்பளிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 8

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் பால்நிலை வன்முறைகளைக் குறைப்பதற்கான செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த செயலணி அலுவலகத்துக்குத் தேவையான ஒரு தொகுதி தளபாடம் மற்றும் காகிதாதிகளை சமூக நல்வாழ்வு அமைப்பினர் பிரதேச செயலக அதிகாரிகளிடம் பிரதேச செயலகத்தில் வைத்து புதன்கிழமை கையளித்தனர்.

இந்தநிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ரி.கமலநாதன், பிரதம முகாமைத்துவ உதவியாளர் எம்.எம்.கலீல், பிரதேச மகளிர் பிரிவு தலைமை முகாமைத்துவ உதவியாளர் எம்.எம். ஹஸன், சுவாட் நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் எஸ்.சுகந்தன் உட்பட பிரதேச செயலக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ)








# கருவாடுகள் விற்போரை சுகாதாரம் பேணக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியினர் கருவாட்டு விற்பன்ன நிலையங்களையும் விட்டு வைக்கவில்லை.

நகரில் உள்ள கருவாடு விற்கும் நிலையங் களில் மீன் கருவாடுகள் மற்றும் இதர கடலுணவுப்பொருள்களை சுகாதார முறைப்படி விற்பனை செய்ய வேண்டும்.

சகல மீன் கருவாடுகள் இதர கடலுணவு பொருள் கள் யாவும் பொலித் தீன்களால் மூடப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சுகாதார பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். அத்துடன் விற்பனை நிலையங் களுக்கு முன்பாக மீன் கருவாடுகளைப் பொலித்தீனினால் மூடியே காட்சிப்படுத்த வேண்டும். பழுதடைந்த கருவாடுகள் போன்றவற்றை விற்பனை செய்வதை உடன் நிறுத்த சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதார பகுதியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுகாதாரப் பகுதியினரின் இந்த அறிவுறுத்தலை அடுத்து நகரில் உள்ள கருவாட்டுக் கடைகளுக்கு முன்பாக மீன் கரு வாடுகள் பொலித்தீனால் மூடப்பட்டு காட்சிப் படுத்தப் பட்டுள்ளன. (வ–17)







ஒவ்வொரு மாதமும் போனஸ் வட்டியை வழங்கும் சேமிப்புக் கணக்குகளுக்குள் சிறந்த சேமிப்புக் கணக்கு

Sampath DOUBLE S சேமிப்புக் கணக்கு

அன்று முதல் இன்று வரை இடைவிடாமல் உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் வட்டிக்கு மேலதிக வட்டியை வழங்குவது **சம்பத் டபள் S** சேமிப்புக் கணக்கு மட்டுமே. இன்றே **சம்பத் டபள் S** சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து நீங்களும் ஒவ்வொரு மாதமும் போனஸ் பெற்றுக்கொள்ளுங்கள்.

- கணக்கினை ஆரம்பித்த உடனே செயற்படுத்தப்பட்ட விஸா டெபிட் கார்ட்.
- சம்பத் வங்கி ATM இயந்திரத்தை உபயோகிக்கும் உங்களுக்கு; கணக்கு மீதியை பரிசீலித்தல், பணப் பரிமாற்றம் செய்தல், பில் கட்டணம் செலுத்தல் மற்றும் கணக்கு நிலுவைக் கூற்று உட்பட பல்வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- சம்பத் விஸா டெபிட் கார்ட் கையில் இல்லையென்றாலும் சம்பத் ATM இயந்திரத்தில் பணம் பெற்றுக்கொள்ள Cardless Cash சேவை.
- கணக்கில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள SMS Alertz வசதி.
- ஒன்லைன் வங்கிச் சேவை உட்பட மேலும் பல சலுகைகள்.

இன்றே 500/- ரூபாவை வைப்புச் செய்து **சம்பத் டபள் S** சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.



சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Like us on facebook.com/Sampathbankplc


Sampath Bank Fitch Ratings AA-(lka) 0112 30 30 50 www.sampath.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ்ப்பாணம் BCAS Campus குருதிக்கொடை முகாம் ஒன்றை அண்மையில் நடத்தியது. யாழ். போதனா மருத்துவ மனை இரத்த வங்கிப் பிரிவினர் குருதிக்கொடையாளர்களை வரவேற்று குருதிக்கொடை தொடர்பிலான விளக்கங்களை வழங்கினர். இந்நிகழ்வில் சுமார் 70 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் குருதிக் கொடை வழங்கியதுடன் யாழ் BCAS கிளை இன் இரண்டாவது குருதிக்கொடை முகாம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)




## சண்டிலிப்பாய் கோட்டத்தில் விபத்து விழிப்புணர்வு

வலி.கிழக்கு,மார்ச் 8
வடக்கில் அதிகரித்து வரும் வீதி விபத்துகளைத் தடுக்கும் நோக்குடன் வடமாகாண கல்வித்திணைக்களமும் சுகாதாரத் திணைக்களமும், யாழ்.மருத்துவ பீட சமுதாய மருத்துவத்துறையினரும் இணைந்து பிர கடனப்படுத்தப்பட்ட விபத்துதடுப்பு வாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திலுள்ள மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த 2ஆம்திகதிதிங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது நாள் விழிப்புணர்வுச் செயற்பாட்டில் 32 பாடசாலைகளைச் சேர்ந்த 97 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 2 மணி வரை வலிகாமம் வலயத்துக்குரிய 34ஆம் அணி மருத்துவ பீட மாணவர் குழுவால் நடத்தப்பட்டவிழிப்புணர்வு நிகழ்வில், ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான வீதிஒழுங்கைப்பின்பற்றுதல் தொடர்பான செயல்முறை விளக்கமும் கார்ட்டூன் காணொளி காட்சிகளும் சாதா ரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கான நிகழ்வில் வீதி விபத்துக்களின் பின்னரான விளைவுகள் தொடர்பான கலந்துரையாடல்மற்றும்காணொளிக் காட்சிகள், வீதி ஒழுங்கைப்பின்பற்றுதல்தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தும்கலந்துரையாடல், வீதி சமிக்ஞைகள் வினாடி வினாப்போட்டி, முதலுதவிசெயன்முறைப் பயிற்சிகள்இடம்பெற்றன.

அதையடுத்து மாணவர்கள் இந்தப் பயிற்சி ஊடாகப் பெற்ற அறிவைப்பரிசோதிக்கும் வினாப் பத்திரம் வழங்கப்பட்டு பரீட்சை நடத்தப்பட்டது. (வ-115)

## குழிகள் நிறைந்த நிலையில் வவுனியா-சின்னக்குளம் வீதி



வவுனியா, மார்ச் 8
வவுனியா, காத்தார் சின்னக்குளம் வீதி, பராமரிப்பின்றி படுமோசமான நிலையில் காட்சியளிப்பதால் அந்த வீதியில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

வவுனியா பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரி வீதியிலிருந்து செல்லும் குறித்த வீதி, பள்ளம், படுகுழிகள் நிறைந்து படுமோசமான நிலையில் காணப் படுகின்றது.

Europe Tour 2015 திரும்பி வருதல் - ஏப்ரல் 25

Rs. 399,000/=

No. 18, Mihindu Mw, Kurunegala 037 2224355

Hot Line | 0771 099 502 | 077 1064507 | 0771 099 500

## METRO Travels & Tours (Pvt) Ltd.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான

IATA Accredited Agent

எமது சேவைகள். . . . .

- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
- சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
- உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்
- குழு பிரயாண வசதிகள்
- வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்
- சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.
- விமானச் சீட்டுக்களுக்கான விசேட சலுகைகள் இருவழிப் பயணத்துக்கானது.

| | | | |
|---|---|---|---|
| சென்னை | - 23,800/= | திருச்சி | - 22,000/= |
| மதுரை | - 16,500/= | லண்டன் | - 85,500/= |
| சுவிஸ் | - 73,300/= | | |

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,**
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: +940212224647, +94 212217199, +94 777881115
Email: Jesurah@metrotravels.lk

உ
கணபதி துணை



## யஜ்ஞோபவீத தாரன ப்ரம்மோபதேச உபநயன அழைப்பு

நிகழும் மங்கலகரமான ஜய வருடம் மாசித்திங்கள் 25ஆம் நாள்(09.03.2015) திங்கட்கிழமை சித்திரை நட்ஷத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் முற்பகல் 10.18 மணிமுதல் 10.55 மணிவரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ. மகேஸ்வரசர்மா சாரதாம்பாள் தம்பதிகளின்
**பௌத்திரனும்**

மயிலிட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ. நாராயண சர்மா தவமணியம்மா தம்பதிகளின்
**தௌகித்திரனும்**

எமது கனிஷ்ட புத்திரனுமாகிய
**சிரஞ்சீவி சஞ்சுதசர்மா**
அவர்களுக்கு

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் யஜ்ஞோபவீத தாரண பிரம்மோபதேசம் செய்வதற்கு எமது குல தெய்வங்களின் திருவருளுடன் பெரியோர்களின் ஆசியும் கைகூடியுள்ளதால் மேற்படி முகூர்த்தத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தீட்சாகுரு
" சிவாகம ஞான பாஸ்கரன் "
**தா. மகாதேவக் குருக்கள்**
(தர்மசாஸ்தா குருகுல அதிபர்) இனுவில்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தங்கள் நல்வரவை நாடும்:

வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம், பன்னாலை, தெல்லிப்பழை.

பிரம்மஸ்ரீ.ம.மகேந்திரசர்மா
ஸ்ரீமதி.ம. வரலக்ஷ்மி அம்மா
செல்வன். ம. லக்ஷ்மி நாராயண சர்மா

சுபம்

(57566)(3.7.8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பன்னாலை தெல்லிப்பழை வரத்தலம் கற்பக விநாயகர் ஆதீன கர்த்தாவும் பிரதம அர்ச்சகருமாகிய
**பிரம்மஸ்ரீ ம. மகேந்திரசர்மா**
**ஸ்ரீமதி ம. வரலக்ஷ்மி அம்மா**
அவர்களின்
**கனிஷ்ட புத்திரன்**
**சிரஞ்சீவி**
**சஞ்சுதசர்மா**
அவர்களின்

**யஜ்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேச உபநயனச்சடங்கு**

சிறப்புற வாழ்த்துகின்றோம்.

Best Wishes

சிவநெறியும் தவநெறியும் சீருடன்
சிவபூசனை ஆற்றியே சிவம் பலபெற
சிவப்பொலிவு பெற்றிடு அந்தணர் பரம்பரையில்
சிரஞ்சீவியாய் உபநயனம் பெறும் சஞ்சீவனே வாழி வாழி

வரத்தலம் கற்பக கணபதியின் கருணையே
வரம்பல நந்தி வேதாகம மந்திரம்
வரம் பெல்லையிலாது காலந்தோறும் பூரணையும்
வாழ்வும் நந்தி உபநயனம் பெற்றிடும் சஞ்சுவே வாழி

வாழ்க அந்தணர் வானவர் ஆ இனம்
என்னும் சம்பந்த வாசகமாய் சம்பந்தனாய்
சிவப் பொலிவுடன் என்றும் பிள்ளையாரின்
பிள்ளையாய் என்றும் வேதிய வேந்தனாய் வாழ்க
வளமுற வாழி வாழி.
உளம் கனிந்த வாழ்த்துக்கள்

நிர்வாகசபையினர் - சிவனடியார் தொண்டர் மடாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹாட்லி பரிசளிப்பு

ஹாட்லிவைற்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் இ. இராஜசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் கலந்துகொள்வது டன் சிறப்பு விருந்தினராக யாழ். ஹாட்லிக்கல்லூரி அதிபர் த.முகுந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த-422)

## பட்டமளிப்பு விழா

வட இலங்கை சங்கீத சபையின் 19ஆவது கலாவித்தகர் பட்டமளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.ஒரு மணிக்கு யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரும் ,வட இலங்கை சங்கீத சபைத் தலைவருமான செ.உதயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் சிறப்பு விருந்தினராகயாழ்.இராமநாதன் நுண் கலைப்பீட ஓய்வுநிலை நடனத்துறை தலைவர் கலாநிதி திருமதி கிருஷாந்தி ரவீந்திரனும் கெளரவ விருந்தினராக தலைவர் யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை திருமதி சுகந்தி ஸ்ரீமுரளிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த)

# மோடியின் வருகையை முன்னிட்டு நாடாளுமன்றில் பலத்த பாதுகாப்பு

## உறுப்பினர்களின் அறைகளும் சல்லடை

கொழும்பு, மார்ச் 8

இலங்கைக்குபயணம்மேற்கொள்ளவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார். இதனை முன்னிட்டு நாடாளுமன்றத்திலும் அதன் வளாகத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பிரதி சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். அத்துடன், சோதனை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்றம் நேற்று முன் தினம் பிற்பகல் 1.30 மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு வேளையிலேயே பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த விவரத்தை அவர் அறிவித்தார். இலங்கைக்கு அரசுமுறைப் பயணத்தை மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சபாநாயகர் விடுத்த அழைப்பையேற்று எதிர்வரும் 13ஆம் திகதி பிற்பகல் 3.15 மணிக்கு சபையில் உரையாற்றுவார். அன்றைய தினத்தில் அனைத்து உறுப்பினர்களையும் சபைக்கு வருமாறு அழைப்புவிடுக்கிறேன்.அதேவேளை, அவரின் வருகையை முன்னிட்டு எதிர்வரும் 12, 13 ஆகிய திகதிகளில் நாடாளுமன்றில் விசேட பாதுகாப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறும். இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுக்கிறேன். மேற்படி தினங்களில் நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்களின் அறைகள், அலுமாரிகள் சோதனையிடப்படும். குறிப்பாக, 13ஆம் திகதி நாடாளுமன்ற பார்வையாளர்கள் கலரி விசேட விருந்தினர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில் பொது மக்கள் எவரும் அங்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். உறுப்பினர்களும் வேறு நபர்களை அழைத்து வர முடியாது. அத்துடன், விசேட வாகன ஒழுங்கு நடைமுறையும் 13ஆம் திகதி அமுலில் இருக்கும். இதன்படி நாடாளுமன்ற போக்குவரத்துப் பொலிஸாராலும், அருகிலுள்ள பொலிஸாராலும் விசேட போக்குவரத்து நடைமுறைகள் பின்பற்றப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்" – என்றார் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி. (த)

## மீனவர்களின் பேச்சு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 8

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணம் காரணமாக தமிழக – இலங்கை மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடையே நடைபெறவிருந்த மூன்றாம் கட்ட பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 13ஆம் திகதி இலங்கைக்கு பயணம் செய்ய உள்ளதால் இந்தப் பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் எதிர்வரும் 15ஆம் திகதி இந்தப் பேச்சு நடைபெறும் என்று கூறப்படுகிறது. (த)

## பிரதமர் ரணிலுடன் சுஷ்மா நேற்று பேச்சு

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சுஷ்மா சுவராஜ் நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதேவேளை இலங்கை போரில் கொல்லப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையினருக்கான நினைவுத்தூபிக்கும் அவர் அஞ்சலி செலுத்தினார். (த)

## வடக்கு அரசின் மக்கள் சந்திப்பு

மன்னார், மார்ச் 8

மடு பிரதேச செயலக குஞ்சுக்குளம் கிராமத்துக்கு பயணம் மேற்கொண்ட வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் அங்குள்ள மக்களை கடந்த சனிக்கிழமை சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வில் மடு பிரதேச செயலாளர் திரு.எப்.சீ.சத்திய சோதி குஞ்சுக்குளம் பங்குத் தந்தை, பாடசாலை அதிபர், கிராம சேவகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சடலம் மீட்பு

ஊர்காவற்றுறையில் வீடொன்றில் இருந்து நபர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே தூக்கில் தொங்கிய நிலையில் இருந்த சடலம் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 42 வயதுடைய அதே இடத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.இருப்பினும் தற்கொலைக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## லண்டனில்

னும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேச்சு நடத்தவுள்ளார். அத்துடன், அரச மட்டத்திலான சந்திப்புகளையும் அவர் இப் பயணத்தின் போது நடத்தவுள்ளார்.

பிரிட்டன் மகாராணியின் விசேட அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி ஐந்து நாள் பயணம் மேற்கொண்டு அங்கு சென்றுள்ளார். அவருடன் வெளிவிவகார அமைச்சர், மீள்குடியேற்ற அமைச்சர் உட்பட 20 பேர் சென்றுள்ளனர். (த-சி)

## கிணற்றில்

சிறுவன் கையில் வைத்திருந்த பிஸ்கட் பைக்கெற்றுடன் கிணற்றில் தவறி விழுந்துள்ளான்.மகனைக் காணாது தேடிய தாய் இறுதில் கிணற்றை எட்டிப்பார்த்தபோது தண்ணீருக்கு மேல் மிதந்து கொண்டிருந்த பிஸ்கட் பைக்கெற்றைக் கண்டதும் தனது மகன் கிணற்றில் விழுந்ததை உணர்ந்து அயலவரின் உதவியை நாடியுள்ளார்.

சுமார் மூன்று மணித்தியாலப் போராட்டத்தின் பின்னரே கிணற்றில் இருந்து சடலம் மீட்கப்பட்டது. தற்போது உடற்கூற்று பரிசோதனைகளுக்காகச் சிறுவனின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-426)

## முறிகண்டியில்

குறித்த விபத்து தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, கிளிநொச்சி முறிகண்டி ஏ-9 வீதியில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

முறிகண்டியிலிருந்து பரந்தனுக்குக் குறுந்தூரச் சேவையில் ஈடுபட்டு வந்த மினி பஸ்ஸுடன் கொழும்பிலிருந்து வேகமாக வந்தகொண்டிருந்த லொறி மோதியதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மினி பஸ்ஸில் பயணம் செய்த ஐவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். விபத்துக்குள்ளான மினிபஸ் வீதியை விட்டு விலகி அருகே நின்ற பனை மரத்துடன் மோதி நின்றது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-21-426)

## இலங்கை

தெரிவித்தார்.

கப்பல் சேவையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாகவும், இச் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கு இரு நாடுகளும் ஆர்வமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் விவாதிக்கப்பட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின்போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமெனவும் அவர் கூறினார். 2011 இல் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு– தூத்துக்குடி இடையேயான கப்பல் சேவை, வர்த்தக ரீதியான சாத்தியம் குறைவாக இருந்தமையால் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஐக்கியமாக

ஒற்றுமையா கச் செயற்பட்டு மீதி மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். அதுவரையில் ஏற்படுத்த மாற்றத்துக்கு பங்கம் விளைவிக்காமல் செயற்பட வேண்டும் என்று கூட்டமைப்பிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கியமாகச் செயற்பட வேண்டும். ஐக்கியமாகச் செயற்படுவது போல ஏனையோருக்குத் தென்பட வேண்டும். சம்பந்தன் மூத்த – பழுத்த அரசியல்வாதி. அவரால் இந்தக் கூட்டமைப்பை ஐக்கியமாக வைத்திருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதன்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாம் ஒரு ஜனநாயக அமைப்பையே வேண்டுகின்றோம். அதில் கருத்து வேறுபாடுகள் இருப்பது சாதாரணம் என்று குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா, கூட்டமைப்பு ஒற்றுமையாகச் செயற்பட்டாலே, இனப்பிரச்சினைக்கு இலகுவில் தீர்வை எட்ட முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போரின் பின்னரான நிலைமைகள் இன்னமும் மாறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. எதிர்பார்த்த மாற்றம் கூட்டமைப்புக்குக் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துள்ளது. குறிப்பாக காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமற்போனோர் விவகாரத்தில் இதுவரை ஆக்கபூர்வமாக எதுவும் எட்டப்படவில்லை என்று கூட்டமைப்பு, வெளிவிவகார அமைச்சரிடம் குறிப்பிட்டுள்ளது.

இறுதியில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளது. பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வு எட்டப்பட வேண்டும். ஆனால் வழங்கப்படும் தீர்வு, எமது மக்களை பிளவுபடுத்தாமல், எமது இறையாண்மையை பிளவுபடுத்தாமல் இருக்க வேண்டும். அதிகாரத்தைப் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும். வழங்கப்படும் தீர்வானது மக்களுக்கு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்று கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதற்குப் பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா, இந்தியா இதற்கு எப்போதும் ஆதரவாக உங்கள் பக்கம் நிற்கும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதைய சூழல் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்று அவர் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான இந்தச் சந்திப்பு நேற்று பிற்பகல் , கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றுள்ளது. இதில் கூட்டமைப்பின் சார்பில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், மாவை. சேனாதிராசா, சுரேஷ் பிரேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். இந்தியத் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர், உதவித் தூதுவர் உள்ளிட்ட வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்துமீறும்

காட்சிக்கு அளித்த பேட்டியி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருநாட்டு மீனவர்கள் பிரச்சினை குறித்து தெரிவித்துள்ள இந்தக் கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளதாவது:–

இந்திய–இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டும். இருப்பினும், இந்திய மீனவர்கள் கோருவது போல், இலங்கையின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு அனுமதி அளிக்க முடியாது. எங்கள் பாரம்பரிய மீன்பிடி பகுதியில் அவர்கள் எப்படி உரிமை கோர முடியும். நாங்கள் ஒரு வேளை இந்திய கடல் எல்லையில் மீன்பிடிக்க வேண்டும், அதுவும் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தவேண்டும் என்றெல்லாம் உரிமை கோரினால் அதற்கு ஒப்புதல் கிடைக்குமா? அப்படி இருக்கும்போது இந்திய மீனவர்கள் ஏன் இங்கு மீன்பிடிக்க விரும்புகிறார்கள். கச்சதீவு ஒப்பந்தம் செய்யப்பட்டபோது இந்திய மீனவர்கள் என்ன மாதிரியான படகுகளைப் பயன்படுத்தி அப்பகுதியில் மீன்பிடிக்கலாம் எனப் புரிந்துணர்வு உள்ளது. அதை ஏற்றுக்கொண்டால் மட்டுமே பேச்சு தொடர முடியும். கச்சதீவை மீட்பதே மீனவர் பிரச்சினைக்குத் தீர்வாகும் எனத் தமிழகம் கருதலாம். ஆனால், கச்சதீவு இலங்கையின் ஒரு பகுதி. இந்திய அரசின் நிலைப்பாடும் அதுவே. கச்சதீவு எங்களது பாரம்பரிய மீன்பிடிப்பவர்கள்வடக்கேயாழ்ப்பாணத்தில் உள்ள எங்களது மீனவர்கள். ஒப்பந்தத்தை மீறி, இந்திய மீனவர்கள் புத்தளம் வரை வந்து மீன்பிடிக்கிறார்கள். இது மிகப் பெரிய பிரச்சினை. இதனால், எங்கள் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதளவில் பாதிக்கப்படுகிறது. இலங்கையில் இறுதிக் கட்டப் போர் நடந்தபோது மட்டுமே இந்திய மீனவர்கள் புத்தளம் பகுதியை விட்டு வைத்த னர். இல்லாவிட்டால் அவர்கள் தொடர்ந்து அங்கு மீன்பிடித்துக் கொண்டுதான் இருந்திருப்பார்கள். தமிழக மீனவர்கள் கச்சதீவுக்கு உரிமை கோருவதற்கு அங்குள்ள அரசியல்வாதிகளின் தூண்டுதலே காரணம். இந்திய மீனவர்கள் 600க்கும் மேற்பட்டோரை இலங்கைக் கடற்படையினர் சுட்டு வீழ்த்தியதாகக் குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. 201 1க்கு முன்னர் விடுத லைப்புலிகளுக்கு இந்திய மீனவர் கள் சிலர் ஆயுதங்களை வழங்கி வந்தனர். அவ்வாறு ஆயுதங்கள் வழங்க இலங்கைக் கடல் எல் லைக்குள் அத்துமீறும் மீனவர்களே சுடப்பட்டிருக்கின்றனர். 2011க்குப் பிறகு எவ்வித துப்பாக்கிச் சூடும் நடைபெறவில்லை. இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறாமல் இருந்திருந்தால் துப்பாக்கிச் சூடு நடந்திருக்காது. அத்துமீறிவிட்டு மனித உரிமை மீறல்கள் பற்றி பேசுவதில் நியாயமில்லை. ஒன்றிரண்டு அப்பாவி மீனவர்களும் சுடப்பட்டிருக்கலாம். அதை மறுக்கவில்லை. ஆனால், இந்தியக் கடல் எல்லைக்குள்ளேயே அவர்கள் இருந்திருந்தால் எவ்வித துப்பாக்கிச் சூடும் நடந்திருக்காது. என் வீட்டுக்குள் யாராவது அத்துமீறி நுழையும்போது அவரை நான் சுட்டால் என் நாட்டின் சட்டதிட்டம் அதை ஏற்றுக்கொள்ளும். மீனவர் பிரச்சினைக்கும் இது பொருந்தும் இவ்வாறு ரணில் தனது பேட்டியில் கூறியுள்ளார்.

(த-4)

# ஆஸ்திரேலிய கங்காருகளா? இலங்கைச் சிங்கங்களா?







உலகக்கிண்ணத் தொடரின் இன்றைய ஆட்டத்தில் ஆஸ்திரேலிய மற்றும் இலங்கை அணிகள் பலப்பரீட்சை செய்கின்றன.
இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் குழு ஏ இனது தரப்படுத்தலின்படி இரு அணிகளும் தலா 4 ஆட்டங்களை எதிர்கொண்டுள்ளன. இதில் இலங்கையணி மூன்றில் வெற்றிகொண்டு 6 புள்ளிகளுடனும், ஆஸ்திரேலிய அணி 2 வெற்றிகள் 1 சமநிலை என மொத்தம் 5 புள்ளிகளுடனும் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களில் உள்ளன.
இந்த நிலையில் இந்த இரு அணிகளுக்குள்ளும் இன்று நடைபெறும் ஆட்டமே குழு ஏ இனதுதரப்படுத்தலை தீர்மானிக்கும் ஆட்டமாக அமையவுள்ளது. ஏனெனில் ஆஸிக்கு இன்னமும் எஞ்சியிருப்பது ஸ்கொட்லாந்து மட்டுமே. அதே போல் இலங்கைக்கும் ஸ்கொட்லாந்து மட்டுமே எஞ்சியுள்ளது. எனவே இந்த இரண்டு அணிகளும் ஸ்கொட்லாந்துடன் வெற்றி பெறுவது உறுதி. ஆகவே இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே இரண்டாவது இடத்தில் இருந்து காலிறுதிக்கு தகுதிபெறும் அணியாக இருப்பதற்கு வாய்ப்புக்கள் மிக அதிகம். இதில் தேல்வியுறும் அணி அதாவது மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் அணி குழு பி யில் இரண்டாவது இடத்தில் இருந்து காலிறுதிக்க தகுதிபெறும் அணியாக கருதப்படும் தென்னாபிரிக்காவை சந்திக்கலாம் என்று பரவலான எதிர்வு கூறல்கள் தற்பொழுது நிலவுகின்றன. (ரி)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் பரமதேவன்



வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பரமதேவன் 06.03.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற துரைராசா, மற்றும் கணேஸ்(France), நாகேஸ்வரி, மகேஸ்வரி (India) சண்முகம் (France), ஆகியோரின் அன்புச் சகோதரனும், வாசுகி, சயந்தன் (France), கபிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரூபஜெயந்தனின் (ராஜா) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற முத்துக்குமார் மற்றும் சின்னத்துரை, தளையசிங்கம், திருச்செல்வன், சத்துருசங்காரம், தவச்செல்வம், இரத்தினாம்பாள், பராசக்தி, கௌரி, இராஜேஸ்வரி, சத்தியவதி, பரமேஸ்வரி, ஆகியோரின் அன்பு மைத்துனரும். அபிலாஸ், ஜஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, சீனியர் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்

தகவல் :
குடும்பத்தினர்.

(57605)(5.3.7)

### செல்லத்துரை இராசையா பத்தர்



கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசையா பத்தர் நேற்று (07.03. 2015) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் பாசமிகு கணவரும், குணராசா, கனகராசா (ஜேர் மனி), யோகேஸ்வரி, தவமலர் (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராஜா, பிறேமாவதி, புஸ்பமலர், சகுந் தலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராணி, ராதிகா, ராஜரட்ணம், காலஞ்சென்ற பத்மானந்தம், மற்றும் லிங்காயினி, றமணன், யோகேஸ் வரன், மனோகரன் ஆகியோரின் மாமனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2015) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.

தகவல் :
பிள்ளைகள்.

### திருமதி புனிதம் மேர்சி அழகரட்ணம் செல்லத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர் விக்ரோரியா கல்லூரி)



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதம் மேர்சி அழகரட்ணம் செல்லத்துரை நேற்று (07.03.2015) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், ஏஞ்சலின், ரஞ்சன், ஹெப்சி, ஈவா, செல்வினி ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற சகோதரி செல்வரட்ணம் (C.P.M) மற்றும் தங்கரட்ணம் ராஜசூரியர், சுகிர்தமலர்-செல்லப்பு, நவரட்ணம், தங்கமலர், கிருபைராஜா, அரியமலர் ராஜரட்ணம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கணேஷ் ஆஸ்பரி மற்றும் கமலா, டயசிறி, வண. ஜேம்சன், ஞானப்பொன்ராஜா, சாமுவேல் தேவானந்தன் ஆகியோரின் மாமியும், போல், டேவிற், பியூலா, டெபோறா, டான், அனோஜன், மியுரியல், ஜொயாஸ் ஆகியோரின் பேர்த்தியும், அஞ்சனாவின் பூட்டியும், ஜீவமணியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் நாளை (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை பார்வைக்கு வைக்கப்பட்டு பி.ப. 6 மணியளவில் சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பிற்கு எடுத்துச் செல்லப்படும். நல்லடக்க வழிபாடு செல்வமியர் அரசடி வீதி, பண்டத்தரிப்பில் 09.03.2015 திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்கு நடைபெற்று நல்லடக்கத்துக்காக பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தல உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஹெப்சி : 077 6245502
ஈவா : 0777 865535

தகவல் :
வண. பிதா. ந.ஜே. ஞானப்பொன் ராஜா

# ஒருநாள் ஆட்டத்தின் முடிசூடா மன்னன் யார்?

ஒருநாள் ஆட்டத்துக்கான வர லாற்றின் சிறந்த வீரருக்கான மகுடத்தை பெற சச்சின், டோனி உள் ளிட்ட 5 ஜாம்பவான்கள் மத்தியில் கடும்போட்டி காணப்படுகிறது.
பிரபல கிரிக்இன்போ இதழ், ஒருநாள் அரங்கின் சிறந்த வீரரை கண்டறிய உள்ளது. இதற்கான போட்டியில் இந்தியாவின் சச்சின், டோனி, வாசிம் அக்ரம் (பாகிஸ் தான்), கில்கிறிஸ்ட்(ஆஸி.,), விவி யன் ரிச்சர்ட்ஸ்(மே.இ.தீவுகள்) ஆகிய 5 பேர் உள்ளனர். இவர்களில் இருந்து சிறந்த நட்சத்திரத்தை டிராவிட், பாண்டிங், கிளைவ் லாய்டு மற்றும் வர்ணனையாளர்களான டோனி கோசியர், மார்க் நிக் கோலஸ், கிரிக்கெட் எழுத்தாளர்கள் உள்ளிட்ட 50 பேர் கொண்ட குழு தேர்வு செய்து, அடுத்த வாரம் அறிவிக்க உள்ளது.

சச்சின்
ஒருநாள் ஆட்டங்களில் மிக நீண்ட காலம் விளையாடிய சச்சின் எண்ணற்ற சாதனைகளுக்கு சொந்தக்காரர். 463 ஆட்டங்களில் 18,426 ஓட்டங்கள், 49 சதம், ஒரு இரட்டை சதம், 96 அரைச்சதம் அடித்துள் ளார். புள்ளி விவரங்களின் அடிப் படையில் பார்த்தால் இவர் தான் சிறந்த வீரர்.

டோனி
டோனியை பொறுத்தவரை ஒரு நாள் அரங்கில் சிறப்பாக பினிசிங் (ஆட்டத்தை முடிக்கும்) திறன் படைத்தவர். எல்லா வற்றுக்கும் மேலாக 2011இல் இந்த அணிக்கு உலகக்கிண்ணத்தை பெற்று தந்த இவர், இக்கட்டான நேரத்தில் அணியை பல முறை மீட்டுள்ளார். தற்போது நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் ஆபத்தான அணிகளில் ஒன்றாக இந்தியாவை உருவாக்கியுள்ளார்.

கில்கிறிஸ்ட்
சுமார் 12 ஆண்டு காலம் ஒருநாள் ஆட்டங்களில்; பங்கேற்ற கில்கிறிஸ்ட் மிகச் சிறந்த இலக்குக்காப்பாளர், துடுப்பாட்ட வீரர். கடந்த 2007 இல் ஆஸ்திரேலிய அணி உலகக்கிண்ணத்தை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார்.

வாசிம் அக்ரம்
பாகிஸ்தானின் வாசிம் அக்ரம், பந்தை சுவிங் செய்வதில் வல்ல வர். ஒருநாள் அரங்கில் 502 இலக்குகளை வீழ்த்திய இவர், 1992இல் பாகிஸ்தான் அணி உலகக் கிண்ணத்தை வெல்ல பெரிதும் உதவினார்.

விவியன் ரிச்சரட்ஸ்
கடந்த 1970 தொடக்கம் 1980களில் மேற்கிந்தியத்தீவுகளின் எழுச்சிக்கு விவியன் ரிச்சர்ட்ஸ் வித்திட்டார். அதிரடியை உலகத்துக்கு அறிமுகம் செய்த இவர் 1975, 1979இல் மே.இ.தீவுகள் உலகக்கிண்ணம் வெல்ல கைகொடுத்தார்.
இப்படி 5 பேரும் தலைசிறந்த வீரர்களாக இருப்பதால், தேர்வுக் குழுவினரின் பணி கடினமானதாக இருக்கும்.
கிரிக்இன்போ இதழால் வரலாற்று சிறப்பு மிக்க இந்த விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட வீரர்களில் டோனி மட்டுமே தற்பொழுது கிரிக்கெட் ஆடுபவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது கிரிக்கட் ஆடும் வேறு எவரும் இந்த பரிந்துரையில் இடம்பெறவில்லை. (ரி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கண்மணிகனகரத்தினம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி கண்மணி கனகரத்தினம் நேற்று (07.03.2015) சனிக்கிழமை மாலை 7.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை- ஆச்சிமுத்து தம்பதிரியன் அன்பு மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு - கனகரத்தினத்தின் (சாத்திரியார் -இணுவில்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம், நடராஜா, பராசக்தி மற்றும் அன்னபூரணம் (கொக்குவில்) ஆகியோரின் சகோதரியும், பாலசுப்பிரமணியம் (கொழும்பு), ஜெயபாலன் (வவுனியா), சந்திராதேவி, இந்திரா (கொக்குவில்), முருகையா (கிளிநொச்சி), சாரதா (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை சுகாதார உதவியாளர்- கொக்குவில்), ஸ்ரீக்குமார் (கனடா), சறோஜினி (லண் டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தல உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 3735303
075 8282044

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி தையல்நாயகி கனகசபை



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வேலணை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி தையல்நாயகி கனகசபை (07.03.2015) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கட்டையர் கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், நாகலட்சுமி, தனலட்சுமி, யோகலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை), மகாலிங்கம் (வவுனியா), சோதிலிங்கம், மகாலட்சுமி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் கணேசமூர்த்தி, சபாநாதன் (ஓய்வு நிலை நிர்வாகக் கிராம அலுவலர்), லோக நாயகி (வவுனியா), உஷாதேவி, சிவநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், கௌசிகா, தனுசிகா, கௌசிகன், தர்சிகன், லக்சிகன், பாரதி, தவலோஜினி, அபிலோஜினி, சோபிகா, சோபிதாஸ், கஜதாஸ், மதுசன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2015) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை வடக்கு,
வேலணை-05

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தென்னாபிரிக்காவை வீழ்த்தி காலிறுதி வாய்ப்பை தக்கவைத்தது பாகிஸ்தான்

மழையின் ஆதிக்கம் அவ்வப்பொழுது கைகொடுக்க 29 ஓட்டங்களால் பலம் பொருந்திய தென்னாபிரிக்காவை வீழ்த்தி காலிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்தியது பாகிஸ்தான்.

தென்னாபிரிக்கா காலிறுதிக்குள் செல்வது உறுதி. ஆனால் பாகிஸ்தானின் நிலையோ எப்பொழுது வேண்டுமென்றாலும் வெளியில் போகலாம் என்ற நிச்சயமற்ற தன்மை. அயர்லாந்துடனான ஆட்டம் மிகுதியாக இருந்தாலும், தென்னாபிரிக்காவை வென்றுவிட்டால் நிம்மதிப்பெருமூச்சு என்ற எதிர்பார்ப்புடன் களமிறங்கியது பாகிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றி தென்னாபிரிக்கா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. அழுத்தம் இல்லாமல் துடுப்பெடுத்தாட விரும்பும் அதிரடி வீரர்களை கொண்ட தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது மிகப்பெரிய தவறு. களமிறங்கியது பாகிஸ்தான். ஆமை வேக ஆரம்பம். விடை பெற்றார் செசாட். இடத்தை நிரப்பினார் யுனிஸ்கான். சொல்லிக் கொள்ளும் படியாக ஒன்றும் இல்லை. ஆனாலும் நடப்பு உலக்கிண்ண தொடரில் அவரது சிறந்த ஆட்டம் இது என்பதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மறுமுனையில் அடித்து நொருக்கிய செசாட் 49 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார். பாகிஸ்தானின் தடுப்புச்சுவர் களத்தில் வழக்கம் போல் அணியை தூக்கி நிறுத்தும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டார். யுனிஸ்கானால் தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியவில்லை. மத்திய வரிசை வீரர்களும் அவ்வளவு பெரிதாக இல்லை. மழையும் தன் வேடிக்கையை காட்டத்தவறவில்லை. ஆட்டம் 47 பந்துப் பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டது ஆனால் பாகிஸ்தான் 46.4 பந்துப்பரிமாற்றத்திலேயே 222 ஓட்டங்களுடன் சுருண்டது.

282 பந்துகளில் 223 ஓட்டங்கள். அதிரடி வீரர்களை அடுக்கி வைத்திருக்கும் தென்னாபிரிக்காவுக்கு இது ஒரு இலக்கேயல்ல. ஆனால் அதீத தன்னம்பிக்கை ஆபத்து என்பதற்கு தென்னாபிரிக்காவின் நேற்றைய ஆட்டம் ஒரு எடுத்துக்காட்டு. தொடர் முழுதும் சொதப்பும் ஹொக் நேற்றைய ஆட்டத்தில் 'டக்கில்' சென்று வழக்கத்துக்கு அதிகமாகவே சொதப்பினார். ஆரம்பத்திலேயே ஆபிரிக்காவை பதற்றம் தொற்றியது. அம்லா பிளாசிஸ்ஸுடன் இணைந்து நிதானம் கொடுத்தாலும் நீடிக்க முடியவில்லை. 67 ஓட்டங்களில் பிளாசிஸ்சும் விடைபெற்றார். பிளாசிஸ்ஸை பின்தொடர்ந்து றொஸ்சொவ். தென்னாபிரிக்காவுக்கு மற்றுமொரு 'டக்' இந்தத் தடவை மில்லர். களத்தில் தலைமை இன்னிங்ஸ். அம்லா உட்பட எவரும் பக்க பலமாக இல்லை. ஒரு முனையில் வில்லியர்ஸ் தாண்டவம் மறுமுனை யில் இலக்குகள் சீரான இடைவெளியில் சரிவு. முடிவில் தென் ஆபிரிக்கா 202 ஓட்டங்களுக்கு சுருண்டது. தொடரில் மூன்றாவது வெற்றியை பெற்ற பாகிஸ்தான் காலிறுதிவாய்ப்பை பிரகாசப் படுத்தியுள்ளது. (ரி)



## 2015 உலகக் கிண்ணம்

அயர்லாந்து எதிர் சிம்பாப்வே
05 ஓட்டங்களால் அயர்லாந்து வெற்றி
நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

அயர்லாந்து

| பெயர் | ஆட்டமிழந்த முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| போட்டர்பீல்ட் | C மசகட்சா B வில்லியம்ஸ் | 29 | 61 | 01 | 0 |
| ஸ்ரார்லிங் | C வில்லியம்ஸ் B பனியங்காரா | 10 | 11 | 02 | 0 |
| ஜோய்ஸ் | C சர்வின் B சரா | 112 | 103 | 09 | 03 |
| பல்பேர்ணி | RO சக்கபவ | 97 | 79 | 07 | 04 |
| கே.பிராயின் | C சக்கபவ B சரா | 24 | 22 | 04 | 0 |
| வில்சன் | C சக்கபவ B வில்லியம்ஸ் | 25 | 13 | 03 | 01 |
| மோனி | B வில்லியம்ஸ் | 10 | 04 | 02 | 0 |
| என்.பிராயின் | C பனியங்கரா B சரா | 02 | 04 | 0 | 0 |
| டொக்ரேல் | ஆட்டமிழப்பில்லை | 05 | 03 | 0 | 0 |
| கௌசத் | ஆட்டமிழப்பில்லை | 02 | 03 | 0 | 0 |
| உதிரிகள் | | 15 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பனியங்கரா | 09 | 69 | 01 | 0 |
| சரா | 10 | 61 | 03 | 0 |
| முப்பரிவா | 10 | 56 | 0 | 0 |
| ரஸ[illegible] | 09 | 51 | 0 | 0 |
| வில்லியம்ஸ் | 9 | 72 | 03 | 0 |
| மசகட்சா | 03 | 18 | 0 | 0 |

TOTAL 331/8 (50)

1-15 (ஸ்ரார்லிங்) 2-79 (போட்டர்பீல்ட்) 3-217 (ஜொய்ஸ்) 4-276 (கே.பிராயன்) 5-308 (வில்சன்) 6-319 (மோனி) 7-322 (என்.பிராயன்) 8-326 (பல்பிர்ணி)

சிம்பாப்வே

| பெயர் | ஆட்டமிழந்த முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சிப்கபா | C போட்டர்பீல்ட் B கௌசக் | 18 | 32 | 03 | 0 |
| ரஸா | C ஸ்ரார்லிங் B மோனி | 12 | 19 | 02 | 0 |
| மிரி | C கௌசக B டொக்ரேல் | 1 | 21 | 01 | 0 |
| மசகட்சா | C வில்சன் B கே.பிராயன் | 05 | 07 | 0 | 0 |
| ரெயிலர் | C கே.பிராயன் B கௌசிக் | 121 | 91 | 11 | 04 |
| வில்லியம்ஸ் | C மோனி B கே.பிராயன் | 96 | 83 | 07 | 02 |
| ஏர்வன் | C என்.பிராயன் B கே.பிராயன் | 11 | 16 | 01 | 0 |
| சக்கபவ | B கௌசக் | 17 | 16 | 01 | 0 |
| பனியங்காரா | C போட்டர்பீல்ட் B மோனி | 05 | 05 | 0 | 0 |
| முப்பரிவா | C போட்டர்பீல்ட் B கௌசிக் | 18 | 07 | 02 | 0 |
| சரா | ஆட்டமிழப்பில்லை | 01 | 01 | 0 | 0 |
| உதிரிகள் | | 11 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| கௌசிக் | 9.3 | 32 | 04 | 02 |
| மோனி | 10 | 58 | 02 | 0 |
| கே.பிராயன் | 10 | 90 | 02 | 0 |
| டொக்ரேல் | 10 | 56 | 01 | 0 |
| மைக்பிராயன் | 08 | 56 | 01 | 0 |
| ஸ்ரார்லிங் | 02 | 26 | 02 | 0 |

TOTAL 326 (49.3)

1-32 (ரஸா) 2-32 (சிப்கபா) 3-41 (மசகட்சா) 4-74 (மிரி) 5-223 (ரெய்லர்) 6-259 (ஏர்வின்) 7-300 (வில்லியம்ஸ்) 8-305 (பனியங்காரா) 9-325 (சக்கபவ) 10-326 (முப்பரிவா)

ஆட்ட நாயகன்: ஜோய்ஸ்



தென்னாபிரிக்காவை வீழ்த்தி காலிறுதி வாய்ப்பைத் தக்கவைத்த பின்னர் பாக்.ரசிகர்களின் உற்சாகம்.

## சிம்பாப்வேயை போராடி வீழ்த்தியது அயர்லாந்து கலக்கல் குட்டிகளாக மாறிய கத்துக்குட்டிகள்

அயர்லாந்து சார்பாக ஜொய்ஸ், பல்பிர்ணியின் அதிரடியும், சிம்பாப்வே சார்பாக ரெயிலர், வில்லியம்ஸ் அதிரடியும் ரசிகர்களுக்கு உற்சாக விருந்தளிக்க இறுதிவரை விறுவிறுப்பாக நடந்த ஆட்டத்தில் சிம்பாப்வேயை 5 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றிவாகை சூடியது அயர்லாந்து.

இரண்டு அணிகளுமே கத்துக்குட்டிகள். ஆனால் கத்துக்குட்டிகளுக்கடையிலான நேற்றைய ஆட்டம் தவிர்க்க முடியாத ஆதிக்கம் வாய்ந்தது. ஏனெனில் பாகிஸ்தான் அல்லது மே.தீவுகள் இந்த இரண்டில் எது சறுக்கினாலும் காலிறுதி வாய்ப்பு இந்த அணிகளில் ஏதேனும் ஒன்றுக்குத்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணி முதலில் களத்தடுப்பை தீர்மானிக்க களமிறங்கியது அயர்லாந்து. ஸ்ரார்லிங் நிலைக்கவில்லை. போட்டர் பீல்ட் சுமாரான ஆட்டம். அயர்லாந்து 79 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகள். களத்தில் ஜொய்ஸ்மற்றும்பல்பிர்ணி.கச்சிதமான ஆட்டம் கட்டுக்கோப்பான ஆட்டம். இணைப்பாட்டங்கள் ஐம்பது, நூறு என்று பறந்துகொண்டேயிருந்தன. இடையிடையே வானவேடிக்கைகளுக்கும் பஞ்சம் இருக்கவில்லை. அரைச்சதம் கடந்து சதத்தையும் [illegible] தார். ஜொய்ஸ். 96 [illegible] எட்டினார். தொடர்ந்தும் சிம்பாப்வே அனுமதிக்கவில்லை. 112 ஓட்டங்களுடன் விடைபெற்றார். ஜொய்ஸின் பணியை கையிலெடுத்தார் பல்பிர்ணி ஜொய்ஸை விட அதிரடியென்றே சொல்லலாம். ஓட்டங்கள் கிடுகிடு வேகத்தில் உயர்ந்து 300இனையும் எட்டியது. மத்திய வீரர்களும் சுமாரான பங்களிப்பு 50 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் அயர்லாந்து 8 இலக்குகளுக்கு 331 ஓட்டங்கள்.

332 ஓட்டங்களை பெற்றால் வெற்றி. முன்வரிசை வீரர்கள் நால்வரும் பதின்ம ஓட்டங்களுடன் விடைபெற்றனர். சிம்பாவே 74 ஓட்டங்களுக்கு 4 இலக்குகள். சிம்பாப்வேயை காப்பதற்காகவே இருக்கும் வில்லியம்ஸ் மற்றும் ரெயிலர் நேற்றைய தினமும் அணியைக்கைவிடுவதாகஇல்லை.சிம்பாப்வே ரசிகர்கள் இப்படியொரு இணைப்பாட்டத்தை [illegible] பின்னர் நேற்றுத் தான் [illegible]கள். இணைப்பாட்டத்துடன் இணைந்து அணியின் ஓட்டங்களும் அதிகரிக்கத்தான் செய்தது. 79 பந்துகளிலேயே சதம் கடந்தார் ரெயிலர். அரைச்சதத்துடன் சதத்தை நெருங்கிக்கொண்டிருந்தார் வில்லியம்ஸ். 121 ஓட்டங்களுடன் ரெயிலர் விடைபெற்றார். அயர்லாந்திடம் முழுமையாக இருந்த ஆட்டம் தற்பொழுது சிம்பாப்வேயின் பக்கமும் திசை திரும்ப ஆரம்பித்தது. இறுதிவரை யாருக்கு வெற்றி என்பதை எதிர்வுகூற முடியாத நிலைமை. இலக்குகளின் இழப்பு சிம்பாவேக்கு சற்று அதிகரிக்க சிம்பாவே அணி 49.3 பந்துகளில் சகல இலக்குகளையும் இழந்து 326 ஓட்டங்களைப் பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ரி)



## 2015 உலகக் கிண்ணம்

பாகிஸ்தான் எதிர் தென்னாபிரிக்கா
29 ஓட்டங்களால் பாகிஸ்தான் வெற்றி
நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

பாகிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழந்த முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அகமட் | RO மில்லர் | 49 | 49 | 05 | 03 |
| செஷாட் | C ஸ்ரெயின் B அப்பொட் | 18 | 30 | 04 | 0 |
| யுனிஸ்கான் | C ரொசோவ் B வில்லியர்ஸ் | 37 | 44 | 04 | 0 |
| மிஸ்பா | C மோர்கல் B ஸ்ரெயின் | 56 | 86 | 04 | 0 |
| மஹ்சூட் | C ரொசோவ் B அப்பொட் | 08 | 16 | 01 | 0 |
| அக்மல் | C வில்லியர்ஸ் B மோர்கல் | 13 | 20 | 02 | 0 |
| அப்ரிடி | C டுமினி B ஸ்ரெயின் | 22 | 15 | 01 | 02 |
| ரியாஸ் | LBW B ரஹீர் | 0 | 01 | 0 | 0 |
| ஹான் | C டுமினி B மோர்கல் | 03 | 11 | 0 | 0 |
| அலி | C ரஹீர் B ஸ்ரெயின் | 01 | 06 | 0 | 0 |
| இர்பான் | ஆட்டமிழப்பில்லை | 01 | 03 | 0 | 0 |
| உதிரிகள் | | 14 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெயின் | 10 | 30 | 03 | 03 |
| அப்பொட் | 09 | 45 | 02 | 0 |
| மோர்கல் | 9.4 | 25 | 02 | 0 |
| ரஹீர் | 09 | 38 | 01 | 01 |
| வில்லியர்ஸ் | 06 | 43 | 01 | 0 |
| டுமினி | 03 | 34 | 0 | 0 |

TOTAL 222 (46.4/47)

1-30 (செஷாட்) 2-92 (அகமட்) 3-132 (யுனிஸ்கான்) 4-156 (மக்சூட்) 5-175 (அக்மல்) 6-212 (அப்ரிடி) 7-212 (ரியாஸ்) 8-218 (மிஸ்பா) 9-221 (அலி) 10-222 (சொகைல்)

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழந்த முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஹெராக் | C அகமட் B இர்பான் | 0 | 02 | 0 | 0 |
| அம்லா | C அகமட் B ரியாஸ் | 38 | 27 | 09 | 0 |
| பிளாஸிஸ் | C அகமட் B அலி | 27 | 29 | 03 | 01 |
| ரொசோவ் | C ஹான் B ரியாஸ் | 06 | 09 | 01 | 0 |
| வில்லியர்ஸ் | C அகமட் B சொஹைல் | 77 | 58 | 07 | 05 |
| மில்லர் | LBW B அலி | 0 | 13 | 0 | 0 |
| டுமினி | C ரியாஸ் B இர்பான் | 12 | 13 | 02 | 0 |
| ஸ்ரெயின் | C அகமட் B இர்பான் | 16 | 17 | 03 | 0 |
| அப்பொட் | C யுனிஸ்கான் B அலி | 12 | 19 | 02 | 0 |
| மோர்கல் | ஆட்டமிழப்பில்லை | 06 | 08 | 01 | 0 |
| ரஹீர் | C அகமட் B ரியாஸ் | 0 | 06 | 0 | 0 |
| உதிரிகள் | | 08 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| இர்பான் | 08 | 52 | 03 | 0 |
| சொஹைல் | 05 | 36 | 01 | 0 |
| அலி | 08 | 40 | 03 | 0 |
| அப்ரிடி | 05 | 28 | 0 | 0 |
| ரியாஸ் | 7.3 | 45 | 03 | 02 |

TOTAL 202 (33.3/47)

1-0 (ஹெராக்) 2-67 (பிளாஸிஸ்) 3-67 (அம்லா) 4-74 (ரொசோவ்) 5-77 (மில்லர்) 6-102 (டுமினி) 7-138 (ஸ்ரெயின்) 8-172 (அப்பொட்) 9-200 (வில்லியர்ஸ்) 10-202 (ரஹீர்)

ஆட்ட நாயகன்: செஷாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வாகைசூடியது சென்.ஜோன்ஸ்

## 25 ஆண்டுகளுக்குப் பின்னர் பதிவு செய்யப்பட்டது பதற்றம் இல்லாத வெற்றி



வெற்றிக் கிண்ணத்துடன் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள்



சிறந்த இலக்குக் காப்பாளர் கபில்ராஜ் (சென். ஜோன்ஸ்)



சகலதுறை ஆட்டநாயகன் திரேஷன் (யாழ். மத்திய கல்லூரி)



சிறந்த பந்து வீச்சாளர் கிருஷாந்துஜன் (சென். ஜோன்ஸ்)



சிறந்த களத்தடுப்பாளர் கௌதமன் (யாழ். மத்திய கல்லூரி)



சிறந்த ஆட்டநாயகன்,சிறந்த துடுப்பாட்ட வீரர் ஜெனி பிளெமிங் (சென். ஜோன்ஸ் கல்லூரி)

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கின் போர் என்று வர்ணிக்கப்படும் சென்.ஜோன்ஸ் மற்றும் யாழ்.மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான 109வது வருட டெஸ்ட் ஆட்டம் சென். ஜோன்ஸ் வெற்றியுடன் நேற்றைய தினம் நிறைவுக்கு வந்தது.

மூன்று நாட்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம்நாளில் துடுப் பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸிற்காக 300 ஓட்டங்களை எடுத்திருந்த வேளை யில் ஆட்டத்தை இடை நிறுத்தியது. பதிலுக்கு தமது முதலாவது இன் னிங்ஸை ஆரம்பித்த யாழ்.மத்திய கல்லூரி ஆட்டத்தின் இரண்டாம் நாளில் சகல இலக்குகளையும் இழந்து 164 ஓட்டங்களை மட்டுமே பெற்று 136 ஓட்டங்களால் பின்தங்கியது. 136 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டா வது இன்னிங்ஸை ஆரம்பித்த சென். ஜோன்ஸ் கல்லூரி 7 இலக்குகள் இழப்புக்கு 136 ஓட்டங்களைப் பெற்றி ருந்த வேளையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது.

272 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தின் இறுதி நாளான நேற்று களமிறங்கியது மத்திய கல்லூரி. ஆரம்பவீரராக களமிறங் கினார்கள் திரேசன் மற்றும் டினோஜன். 5 ஓட்டங்களுக்கு மத்தியின் ஆரம்பம் தகர்க்கப்பட்டது விடைபெற்றார் டினோஜன். டினோஜன் வழியிலேயே பின்தொடர்ந்தனர் கோமேதரன் மற்றும் அலன்ராஜ். பதின்ம ஓட்டங்களை எட்டுவதே எட்டாக்கனியாக இருந்தது. மத்திய கல்லூரி 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகள். ஒருமுனையில் திரேசன் நங்கூரம் போட்டு நின்றார். எந்தவொரு பந்துவீச்சாளராலும் அவரை அசைத் துப்பார்க்க முடியவில்லை. டெஸ்ட் ஆட்டத்துக்கு இலக்கணமான சர்வதேச தரமான ஆட்டத்தை விளையாடிக் காட்டினார் திரேசன். திரேசனுக்கு ஈடுகொடுத்து கொஞ்ச நேரம் தாக்குப் பிடித்தார் கார்த்தீபன். அணி ஐம்பது ஓட்டங்களை எட்டிப்பிடித்தது ஆனால் நிலைக்க முடியவில்லை. கார்த்தீபனை கபில்ராஜ் வழியனுப்பி வைத்தார். அடுத்தடுத்து கிருபாகரனும் நிரோஜ னும் சுப்பராக இல்லா விட்டாலும் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு பதின்ம ஓட்டங்களுடன் விடைபெற் றனர். 'ஸ்கோர் கார்ட்' 116–6 எனக் காட்டியது.

படிப்படியாக சென்.ஜோன்ஸின் பிடியில் மத்திய கல்லூரி சிக்க ஆரம் பித்தது. ஆனாலும் ஆரம்ப வீரராக களமிறங்கிய திரேசன் ஆட்டமிழக்க வில்லை. மதுசனும் 'டக்கில்' வெளி யேற மத்தியின் மறு இலக்கும் மறு கணத்திலேயே தகர்க்கப்பட்டது. சென். ஜோன்ஸ் ரசிகர்கள் வெற்றியை கொண்டாடிக்கொண்டிருந்த வேளை யில் 9ஆம் இலக்க வீரர் கௌதமன் சற்று ஆறுதலளித்தார். கௌதமனின் இருப்பை பயன்படுத்திய திரேசன் தனது வடக்கின் போரின் சிறப்பம் சங்களில் ஒன்றாக தனது அரைச் சதத்தையும் பதிவுசெய்தார். இலக் குக்காப்பாளர் ஏமாற்று வியூகம் அமைத்து கௌதமனை ஆட்டமிழக்கச் செய்ய ஏமாற்று வியூகத்தை ஏற்றுக் கொள்ளாத மத்தியின் ரசிகர்கள் அவரின் ஆட்டமிழப்பையும் ஏற்றுக் கொள்ளவில்லை. வடக்கின் போரில் உண்மையில் போர் சூழ்ந்து விடக் கூடாது என்பதற்காக சென்.ஜோன்ஸ் அந்த ஆட்டமிழப்பை திரும்ப பெற்றுக் கொண்டது. களத்துக்கு மீண்டும் வந்தார் கௌதமன் இரண்டே பந்து களில் மீண்டும் பவிலியனுக்கு சென் றார். பின்வரிசை வீரர்களுக்கு வாய்ப் புக்களை வழங்காமல் அனைத் துப் பந்துகளையும் தானே எதிர் கொண்டு அதிரடியில் வித்தைகாட் டினார். இருப்பினும் கிடைத்த வாய்ப் புக்களை சென்.ஜோன்ஸ் சரியாகப் பயன்படுத்த மத்திய கல்லூரி 188 ஓட்டங்களில் சுருண்டது. 84 ஓட்டங்களால் வடக்கின் போரில் வாகை சூடியது சென். ஜோன்ஸ்.

ஆட்டநாயகன் மற்றும் சிறந்த துடுப் பாட்ட வீரராக சென்.ஜோன்ஸ் கல்லூ ரியின் ஜெனி பிளெமிங்கும், சிறந்த பந்து வீச்சாளராக சென். ஜோன்ஸ் கல்லூ ரியின் கிசாந்துஜனும் சிறந்த களத் தடுப்பாளராக யாழ். மத்திய கல்லூ ரியின் கௌதமனும் சிறந்த சகல துறை வீரராக யாழ். மத்திய கல்லூரி யின் திரேசனும் சிறந்த இலக்குக்காப் பாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் கபில்ராஜும் தெரிவு செய்யப்பட்டனர்.

(த–ரி–23)


### பெயர்மாற்றம்

யோசப் பிரியந்தன் ஆகிய நான் இன்றிலி ருந்து எனது பெயரை பிரியந்தன் என மாற்றிக் கொள்வதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் பிரியந்தன் என கையொப்பம் இடுவேன் என உறுதிப்படுத்துகின்றேன்.
பிரியந்தன்.

### GERMAN INSTITUTE

German Swiss நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது.
No.10, Palaly Road, Jaffna, Mrs.P. Kajenthini T.P. 077 1604823

### ஆடுகள் விற்பனைக்கு

பெரிய இன ஆடுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0755113457 (கோண்டாவில்)

### பழுதடைந்த i3 LAP

பழுதடைந்த i3 LapTop வாங்கப்படும்.
தொடர்பு : 0714932281

### சல்லிக்கற்கள் விற்பனைக்

¾ கியூப் ½ இஞ்சி சல்லி - 3000/=
¾ கியூப் ¾ இஞ்சி சல்லி - 5000/=
ஏற்றுக் கூலியுடன் தொடர்புக்கு: 077 404 7912, 077 077 6565

GCE O/L & GCE A/L

09 March 2015 (ICT)
15 March 2014 (English)
NVQ Level - 3 (National Vocational Qualification) ICT – Information and Communication Technology
English
NVQ Level - 3 (National Vocational Qualification) Electrical
FREE
Registration
EXAMPOINT
120/6, Palaly Road, Kondavil, Jaffna

### இத்தாலி மொழி

இத்தாலி செல்ல இருப்போர் இனி கட்டாயம் கற்க வேண்டிய மொழி. திறமையான ஆசிரியரின் வழி காட்டலில் சான்றிதழைப் பெற்றிட இணையுங்கள்.
BCLL 021 300 3889 077 1327818 YMCA

### சேவை

வட மாகாண வியாபார உரிமையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். உங்கள் வியாபாரம் நட்டத்தில் ஓடுகின்றதா? புதிதாக வியாபாரம் ஆரம்பிக்க விரும்புகின்றீர்களா? உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் முதல்தர நிறுவனங்களில் பொதுமுகாமையாளராக (விற்பனை / சந்தைப்படுத்தல் / நிதி / கொள்வனவு மற்றும் நிர்வாகம்) மிகுந்த அனுபவமுள்ளவரால் (sales commission %) விற்பனை தரகு% அடிப்படையில் உங்கள் நிறுவனம் வழிநடத்தப்படும்.
தொடர்பு: 0711 384774

### பிரத்தியேக கணினி வகுப்

• 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
• Ms office, Internet & E-mail, DTP, Web Design Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
• பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
ஆசிரியர்: KRC TP:07796720


விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### CIMA Common Case Study

Operational Level (May-2015)
Starts on 14th of March
spectra skills
More Details
No.-19, People's Bank 2nd Floor, Stanley Road, Jaffna.
Phone - 767520940

### ரயர் விற்பனைக்கு

இலங்கையின் NO – 01 ரயர்களான MRF, MICHELIN, KUMHO மற்றும் HAIDY வகை ரயர்களை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பிரகாஸ் ரான்ஸ்போட் & ஏஜென்சி
இல.457.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2222 145


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.